Registered as a Newspaper

பக்கங்கள் – 12

விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 272

சனிக்கிழமை
24 ஒகஸ்ட் 2024

ஆவணி 08 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

முச்சந்தி முரளி



" உப்பிடி என்ன எச்சரிக்கை விட்டாலும் அவை உண்மையைச் சொல்லமாட்டினம் கண்டியளோ"

# போலித் தகவலென்றால் குடியுரிமை பறிக்கப்படும்

## ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு தேர்தல் ஆ.குழு எச்சரிக்கை



**கொழும்பு, ஓகஸ்ட் 24**

**ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள், போலியான தகவல்களை முன்வைத்தால், அவர்களின் குடியுரிமை பறிக்கப்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு எச்சரிக்கை விடுத்துள்ளது.**

11

## ஊதிய அதிகரிப்பு சந்தர்ப்பவாதமே!

### ஜனாதிபதி வேட்பாளர் சஜித் நேற்றுப் 'பளார்'



கொழும்பு, ஓக. 24
அரச உத்தியோகத்தர்கள் நாட்டுக்குச் சுமை என்று இது வரை காலமும் கூறிவந்த அரசாங்கம் தற்போது அவர்கள் மீது கரிசனை காட்டுகின்றது.

11

### ஜனாதிபதி ரணில்

## தமிழர்களின் ஆதரவைக்கோரி பொதுக்கட்டமைப்புக்கு கடிதம்?

### ரெலோவுக்குக் கிடைத்தது ஏனையவர்கள் கைவிரிப்பு

கொழும்பு, ஓக. 24
ஜனாதிபதித் தேர்தலில் தனக்கு ஆதரவு வழங்குமாறும், அதனை முன்னிறுத்தி தமிழ்ச் சமூகத்தின் எதிர்பார்ப்புகள் என்னவென்பது பற்றிக் கலந்துரையாடுவதற்கு வருமாறும் தமிழ்ப் பொதுக்கட்டமைப்பினருக்கு ஜனாதிபதி ரணில் மீண்டும் கடிதம் மூலம் அழைப்பு விடுத்துள்ளதாக சமூக ஊடகங்களில் தகவல்கள் வெளியாகியுள்ளன.

11

## வெளிநாட்டு மோசடி: கைதானார் பெண்!

யாழ்ப்பாணம், ஓக. 24
வெளிநாடு அனுப்புவ்தாகத் தெரிவித்து, 15 இலட்சம் ரூபா வரையில் பண மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

11

## தேர்தலைக் கண்காணிக்க 12 நாடுகளுக்கு அழைப்பு

கொழும்பு, ஓக. 24
ஸ்ரீலங்கா ஜனாதிபதித் தேர்தலில் கண்காணிப்புப் பணிகளை மேற்கொள்ள வருமாறு, 12 நாடுகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.
ஸ்ரீலங்கா ஜனாதிபதித் தேர்தல் செப்ரெம்பர் மாதம் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில், வழமை போன்று இம்முறையும் தேர்தல் கண்காணிப்புப் பணிகளை முன்னெடுக்குமாறு தேர்தல்கள் ஆணைக் குழுவால் விடுக்கப்பட்ட உத்தியோக பூர்வ அழைப்பை ஐரோப்பிய ஒன்றியம் ஏற்றுக்கொண்டிருந்தது. இதைத் தொடர்ந்தே தற்போது வேறு 12 நாடுகளுக்கு அழைப்பு

11



## விபத்துக்குள்ளானது கார்: 2 வயோதிபர்கள் காயம்!

யாழ்ப்பாணம், ஓக. 24
யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த கார் ஒன்று நல்லூர், சட்டநாதர் கோயிலுக்கு அருகாமையில் கட்டுப்பட்டை இழந்து மின்கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் அதில் பயணித்த

11

## பண மோசடி: ஆண் கைது

யாழ்ப்பாணம், ஓக. 24
சுமார் 22 இலட்சம் ரூபா வரையில் மோசடியில் ஈடுபட்ட நபரொருவர் யாழ்ப்பாணம் மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்

11

## ஜனாதிபதித் தேர்தல் முன்னே: உள்ளூராட்சித் தேர்தல் பின்னே!

### முன்னாள் தேர்தல்கள் ஆணையர் மஹிந்த தேசப்பிரிய தெரிவிப்பு



கொழும்பு, ஓக. 24
ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர், உள்ளூராட்சித் தேர்தல் இடம்பெறுவதற்குச் சாத்தியங்கள் உள்ளன என்று முன்னாள் தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.
உள்ளூராட்சித் தேர்தல் நடத்தப்படாமல் தவிர்க்கப்பட்டமை

11

## கட்டடத் தொழிலாளி சடலமாக நேற்று மீட்பு

கிளிநொச்சி, ஓக. 24
கிளிநொச்சி - இரத்தினபுரத்தில் கட்டட வேலையில் ஈடுபட்ட தொழிலாளி ஒருவர் சடலமாக நேற்றுக் காலை மீட்கப்பட்டுள்ளார்.

11

### மருத்துவ அலட்சியம்

## வவுனியாவில் இறந்த குழந்தைக்கு யாழில் உடற்கூற்றுப் பரிசோதனை!

வவுனியா, ஓக. 24
வவுனியா போதனா மருத்துவமனையில், மருத்துவர் ஒருவரின் அலட்சியத்தால் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படும் சிசுவின் சடலம், உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு நேற்றுக் கொண்டுவரப்பட்டுள்ளது.
கடந்த இரு தினங்களுக்கு

11



## பொதுவேட்பாளரின் பரப்புரை ஆரம்பம்

யாழ்ப்பாணம்;, ஓக. 24
தமிழ்த்தேசியப் பொதுக்கட்டமைப்பின் தமிழ்ப் பொதுவேட்பாளர் பா. அரியநேந்திரனின் 'நமக்காக நாம்' எனும் தொனிப் பொருளிலான ஜனாதிபதித் தேர்தல் பிரசாரப் பயணம் யாழ்ப்பாணம், சக்கோட்டை கொடிமுனையிலிருந்து நேற்றுக் காலை 9 மணியளவில் ஆரம்பமானது.

11

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# அடிப்படை உரிமையை மீறி ஜனாதிபதி துரோகமிழைப்பு



## எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஓக. 24

உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நிறுத்துவதற்கு அரசாங்கம் மேற்கொண்ட முயற்சி மக்களின் அடிப்படை உரிமைகளை மீறுகின்ற செயற்பாடு என உயர் நீதிமன்ற நீதியரசர் உட்பட ஐவர் அடங்கிய நீதிபதிகள் குழாம் வழங்கிய தீர்ப்பு சுட்டிக்காட்டுகின்றது. இந்தத் தன்னிச்சையான - தான்தோன்றித்தனமான தீர்மானத்துக்கு ஜனாதிபதியே பொறுப்புக்கூறவேண்டும்.

-இவ்வாறு மொரட்டுவவில் இடம்பெற்ற தேர்தல் பரப்புரைப் பேரணியில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நான் என்கின்ற மமதையுடன் அதிக பட்ச தந்திரங்களைப் பயன்படுத்தி, அரசியல் யாப்பு விதிமுறைகளை மீறி, நிறைவேற்று அதிகாரத்தை தான்தோன்றித்தனமாகப் பாவித்து அவர்களுடைய அரசியல் ஆயுட்காலத்தை நீடித்துக்கொள்ள முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிதி அமைச்சராக மக்களின் அடிப்படை உரிமையை மீறி இருப்பதாக நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது.

மக்களின் அடிப்படை உரிமையை மீறிய ஒருவராகவே ஜனாதிபதி தேர்தலில் அவர் களம் இறங்கியுள்ளார்.

மக்களின் வாக்குரிமையை மீறச் செய்திருக்கின்ற இவர்கள் எதிர்காலத்தில் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள். அவர்கள் இந்த நாட்டு மக்களுக்கு நட்டஈடு வழங்கவேண்டும் - என்றார். (ச-44)



## 'பொ-பொ' நினைவுக்கல்லில் அரியநேந்திரன் மரியாதை!

யாழ்ப்பாணம், ஓக. 24

தமிழ்ப் பொதுவேட்பாளராகப் போட்டியிடும் பா.அரியநேந்திரன் 'பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை' மக்கள் பேரெழுச்சி பேரணி நினைவுக் கல்லுக்கு மரியாதை செலுத்தியிருந்தார்.

'நமக்காக நாம்' என்ற தொனிப்பொருளில் தேர்தல் பரப்புரை நடவடிக்கைகள் நேற்று வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப்பட்ட நிலையில் நினைவுக்கல் நிறுவப்பட்டிருந்த இடத்துக்குச் சென்ற பொதுவேட்பாளர் பா.அரியநேந்திரன் மரியாதை செலுத்தினார். (ச-100)

## விபத்தில் இருவர் காயம்!

இரு மோட்டார் சைக்கிள்கள் மோதி விபத்துக் குள்ளானதில் இருவர் காயமடைந்துள்ளனர். இந்தச் சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை காலை மீசாலை ஏ-9 வீதியில் இடம்பெற்றுள்ளது. ஒழுங்கையிலிருந்து பிரதான வீதிக்கு வந்த மோட்டார் சைக்கிளும் பிரதான வீதியில் பயணித்த மற்றொரு மோட்டார் சைக்கிள் மோதியதில் விபத்து நிகழ்ந்துள்ளது. காயமடைந்த இருவரும் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். (ச-9)

### ரணிலுக்கு ஆதரவாக

## 'ஜனஜய முன்னணி'

கொழும்பு, ஓக. 24

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்கும் ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இணைந்து, ஜனஜய முன்னணி எனும் புதிய கூட்டணியொன்றை ஸ்தாபிக்கவுள்ளனர்.

இந்தப் புதிய கூட்டணியின் தலைமைப் பொறுப்பை பிரதமர் தினேஷ் குணவர்த்தனவுக்கு வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும் கூட்டணியின் பொதுச் செயலாளர் பதவிக்காக அமைச்சர் ரமேஷ் பத்திரணவின் பெயர் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

புதிய கூட்டணியை ஸ்தாபிப்பதற்கான முதற்கட்ட கலந்துரையாடல் பிரதமர் தினேஷ் குணவர்த்தன மற்றும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க ஆகியோரின் தலைமையில் நேற்றுமுன்தினம் அலரிமாளிகையில் இடம்பெற்ற நிலையிலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## ம. போராட்ட முன்னணி வவுனியாவில் பரப்புரை

வவுனியா, ஓக. 24

மக்கள் போராட்ட முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளரான நுவான் போகபேவை ஆதரித்து வவுனியா நகரில் துண்டுப்பிரசுரம் விநியோகிக்கும் செயற்பாடு நேற்று முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா இலுப்பையடிப்பகுதியில் ஆரம்பமான இந்தப் பரப்புரை நடவடிக்கை வவுனியா நகரப்பகுதி எங்கும் முன்னெடுக்கப்பட்டது. பரப்புரை நடவடிக்கையில் மக்கள்போராட்ட அமைப்பினர் மற்றும் புதிய ஜனநாயக மார்க்சிஸ லெனினிசக் கட்சியினர் மற்றும் மக்கள் கலந்துகொண்டிருந்தனர். (ச-110)

# அதிகாரத்தை வழங்கோம் கலாசாரத்தைக் காப்போம்!

## தமிழ்மக்களிடம் நாமல் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 24

தமிழர்களின் கலாசாரம் மற்றும் மொழி உரிமைகளைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். மொழி உரிமை பாதுகாக்கப்படும். ஆனாலும் மாகாணசபை முறைமையில் பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களை வழங்கப்போவதில்லை என்று பொதுஜன பெரமுனக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

அநுராதபுரத்தில் ஆரம்பமான முதலாவது தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வாக்குவேட்டை நடத்துவதற்காக தமிழ் மக்களை ஏமாற்றும் நிலைப்பாட்டில் நான் இல்லை. பௌத்த நாட்டுக்குள் ஏனைய மதங்களுக்கும் உரிய இடத்தை வழங்குவதற்கு நாம் தயார். அதனை நாம் நிச்சயம் செய்வோம். மாகாண



சபை முறைமையில் பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களை வழங்கப்போவதில்லை. வடக்கில் உள்ளோரை தேர்தல் காலங்களில் ஏமாற்றுவதால் எதுவும் நடக்கப்போவதில்லை. முடியும் என்பதை நாம் நிச்சயம் செய்வோம். தமிழர்களின் கலாசாரத்தை பாதுகாப்போம். மொழி உரிமை பாதுகாக்கப்படும். ஆனாலும் வடக்கு, கிழக்கு இணைப்பு என்ற விடயத்தையும் நிறைவேற்ற முடியாது. வரிச் சுமையிலிருந்து மக்களை மீட்க புரட்சிகரமான திட்டங்களை முன்னெடுக்க வேண்டும். - என்றார். (ச-44)

# இனப்பிரச்சினைத் தீர்வு நாட்டுக்கு மிக அவசியம்

## ஜனாதிபதி வேட்பாளர் ஜயசூரிய தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 24

தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணாமல் இலங்கையால் ஓர் அங்குலமேனும் முன்னோக்கிச் செல்லமுடியாது. தமிழ் மக்களுக்கு தம்மைத் தாமே ஆளக்கூடிய சுயநிர்ணய அடிப்படையில் தீர்வு மிகவும் அவசியம்.

-இவ்வாறு ஐக்கிய சோஷலிசக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் சிறிதுங்க ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொருளாதாரப் பிரச்சினை மட்டும் அல்ல, இனப்பிரச்சினையும் பாரதூரமான பிரச்சினையாகும்.

தேர்தல் நெருங்கும் வேளையில்தான் 13ஆம் சட்டத் திருத்தம் பற்றிப் பேசப்படுகின்றது. இது நகைச்சுவைத்தனமான செயற்பாடாகும். மாகாணசபை முறைமை நடைமுறையில் உள்ளது. அதன்மூலம் பிரச்சினை தீர்ந்ததா? குறைந்தபட்சம் பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களாவது பகிரப்பட்டதா? இல்லை.

ஜனாதிபதி வேட்பாளர்களில் இனப்பிரச்சினைக்கான தீர்வு எம்மிடம் மட்டுமே உள்ளது. நாம் சுயநிர்ணய உரிமையை ஏற்கின்றோம்.

தமது எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் உரிமை தமிழர்களுக்கு வழங்கப்படும். ஸ்கொட்லாந்தில் போன்று இங்கு தீர்வு வழங்கப்படும்- என்றார். (ச-இ)



## இ.தொ.கா. ரணிலுடன் ஒப்பந்தம்

கொழும்பு, ஓக. 24

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் எதிர்வரும் 28 ஆம் திகதி இ.தொ.கா. புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவுள்ளது என இ.தொ.கா. தலைவர் செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

இந்தப் புரிந்துணர்வு உடன்படிக்கையில், மலையக மக்கள் மாத்திரம் இன்றி இலங்கை வாழ் தமிழர்களின் நலன்புரித் திட்டங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ்ப்பாணம், ஓக.24
வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த நல்லூர்க்கந்தசுவாமி ஆலய வருடாந்த பெருவிழாவின் 14 ஆம் நாள் வியாழக்கிழமை மாலை நேர உற்சவத்தில் சர்ப்ப வாகனத்தில் பக்தர்கள் புடைசூழ முருகப்பெருமான் வெளிவீதி உலா வந்து அருள்பாலித்தார். (ச-25-100-66)







யாழ்ப்பாணம், ஓக.24
அண்ணா பல்கலைக்கழக இசைக் கலைமணி சைந்தவி கேதீஸ்வரன் குழுவினரின் தெய்வீக இசை விருந்து சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைப் பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது. (ச-45-66)

## ஆன்மீக அருளுரை

நல்லூர்க்கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருந்திருவிழாவில் சிவகுரு ஆதீனத்தின் ஏற்பாட்டில் சிவகுரு ஆதீன முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகள் 'பக்தி பெருகிடும் தலம்' எனும் தலைப்பில் இன்று சனிக்கிழமை இரவு 8 மணிக்கு ஆன்மீக அருளுரை ஆற்றுவார். (ரி-66,100)




வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க்கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருந்திருவிழாவை முன்னிட்டு இளங்கலைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் இடம்பெற்றுவரும் உற்சவகாலத் தெய்வீக இசை அரங்கு நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன.

14ஆம் திருவிழாவான நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் நா. சண்முகலிங்கனின் இன்னிசையரங்கும், விக்கினேஸ்வரி நரேந்திரா மாணவர்களின் குழு இசையும் நடைபெற்றன. (ச-66)

## நல்லூர்த் திருவிழாவின் 16 ஆம் நாள் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஓக.24
இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நல்லூர்க்கந்த சுவாமி தேவஸ்தான வருடாந்தப் பெருந்திருவிழாவை முன்னிட்டு, நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் சிறப்பு நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

16 ஆம் நாள் நிகழ்வு, நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் இரண்டாவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் மற்றும் அமெரிக்கா ஹவாய் சைவ ஆதீன சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள், சீடர் ஆன்மீகச் சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் ஆகியோர் திருமுன்னிலைவகிக்க, கந்தரோடை ஸ்ரீ அருளானந்தப் பிள்ளையார் கோவில் பிரதமகுரு சிவஸ்ரீ பரமேஸ் ஜெயகுமாரக் குருக்கள் தலைமையில் இடம்பெறவுள்ளது.

பிரதம அதிதியாக காரைநகர் பிரதேச செயலர் ரஞ்சனா நவரத்தினம், கௌரவ அதிதியாக சிவப்பணிச்செம்மல், முனைவர் வே. சங்கரநாராயணன், சிறப்பு அதிதியாக வவுனிக்குளம் நீர்பாசனப் பொறியியலாளர் சர்வானந்தன் சர்வராஜா, காரைநகர் கிழவன்காடு கலாமன்றத் தலைவர் நடராசா சோதிநாதன் மற்றும் ஓய்வு நிலை ஆசிரிய ஆலோசகர் கலாபூஷணம் யோகலட்சுமி சோமசுந்தரம் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளார்கள். காரைநகர் சிவகாமி அம்பிகா சமேத ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் அறநெறிப் பாடசாலை, திக்கரை இந்து அறநெறிப் பாடசாலை, பாலாவோடை முத்துமாரி அம்மன் அறநெறிப் பாடசாலை, கல்வந்தாழ்வு ஸ்ரீ முருகன் அறநெறிப் பாடசாலை மாணவர்கள் கலை நிகழ்வுகளை வழங்கவுள்ளனர். விசேட நிகழ்வாக 'உஷாகானம்' இசைக்கல்லூரி மாணவர்கள் வழங்கும் வாத்திய சங்கமம் நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (ரி)




வேலின் வடிவம் உந்தன்
வினை தீர்க்கும் நல்லை பதி வாழ் எங்கள் நாயகனே நமக்கெலாம் அருள்வாய் என்றும் வேலவனே!
(நல்லை)

ஐவைந்து நாட்கள் திரு விழாக்கள் கண்டு
ஐஸ்வரியம் தந்தேஅருள் புரிவாய்!
(நல்லை)

அடியவர் கூட்டம் அணி திரள அழகிய மயிலில் பவனி வந்து அடியவர் குறைகளை அகற்றிடுவாய்!
(நல்லை)

கோபுரங்கள் வான் வரை உயர்ந்து நிற்கும் கோடிக்கரங்கள் உன்பால் வரம் வேண்டி நிற்கும் வேலின் வடிவம் எந்தன் வினை தீர்க்கும் அவன் பன்னிரு விழிகள் என்றும் எமைப் பார்க்கும்
(நல்லை)

அழகனென்றும் அறிவுக்கடவுளென்றும் ஆறு திருமுகம் கொண்ட முருகா வாடி வருமடியார் வினையறுக்க நல்லை பதி வாழ் கந்தா!
(நல்லை)

■ கு.ஸ்ரீராகவராஜன்,

### மாம்பழக் கதையின் நாயகனே!

நல்லூர் பெரும் பதியில் நலமுறவே வீற்றிருக்கும் வேலவா!
அடியவர்கள் குறைகள் தீர்க்கும் அலங்காரக் கந்தா! மாம்பழத்திற்காய் உலகை வலம் வந்தாய்! கோபம் கொண்டு கோவண ஆண்டியாய் பழனிமலை மீது பழம் நீயாக நிண்டும் நாரதர் கலகம் கின்றும் முடியவில்லை மாம்பழக் கதையின் நாயகனே பதில் கூறையா!

■ நயினை விசு இராசநாயகம்.

### துன்பங்கள் தீர்ப்பாய்

மயில் ஏறி வருபவனே
சேவல் மயில் வாகனனே
பக்தர் குறை தீர்க்கும் பாலகனே
நாடி வரும் அடியவரின்
வேண்டும் வரம் தீர்ப்பவனே
ஆடம்பரக் கந்தனாய்
அமைந்திரும் நல்லூரானே
தோகை மயில் நீ ஏறி துன்ப
மெல்லாம் தீர்த்தருள்வாய்
பாலகனே உன் பாதம்
பணிந்து தொழுவோர்க்கு
தொல்லைகள் தீர்த்து
துன்பம் போக்கி
இன்பந்தனை அருள்வாய்
ஏறுமயில் வாகனனே

■ கு.சுரேஸ்குமார்

கலாசாரம் பேணி நிற்கும் கந்தனவன் கோட்டத்திலே
உலா வந்து எமை நோக்கும்
ஓங்காரன் சிலையழகாய்ச்
சிரித்தருளும் நல்லையிலே
சீலமும் மேவி நிற்கச் சேரும்
புகழ் கந்தனுக்கே சிறப்பு!

சிவயோகன் செல்லப்பன் சிங்காரமாயுலவித்தலம் சிறக்கத்
தடம்பதித்த நல்லையிலே
அவம் போக்கி ஆடுவதும் பாடுவதும் அடியாருளம் வேண்டுவதும் தஞ்சமென்று அவன்
பதத்தைத் தான்!

■ தேவி.கணேஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







## மடு பண்பாட்டு விழா

மன்னார், ஓக.24

மடு பிரதேச செயலகம் ஒழுங்கு செய்த வருடாந்த கலை பண்பாட்டுப் பெருவிழா மடு பிரதேச செயலர் கீ. பீட். நிஜாகரன் தலைமையில் மடு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மன்னார் மாவட்ட ச் செயலர் க.கனகேஸ்வரன், சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி லாகினி நிருபராஷ், கௌரவ விருந்தினராக மடு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி வொலன்ரைன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

விழாவில் மூன்று கலைஞர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன.

நிகழ்வில் அரச உத்தியோகத்தர்கள், கலைஞர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், கலைமன்ற உறுப்பினர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ரி-45-213)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** எதிர்பார்த்த உதவி கிடைக்கும். காரியங்கள் முடிவதில் சிறு தாமதம் ஏற்படக்கூடும். மனதுக்கு மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். சிலருக்கு எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். ஆஞ்சநேயர் வழிபாடு நன்று. பிணக்குகள் நீங்கும்.

**இடபம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். ஆதாயம் கிடைக்க வாய்ப்பு உள்ளது. சிறு சிறு சங்கடங்கள், வீண் செலவுகளும் ஏற்படக்கூடும். எதிர்பாராத செலவுகளால் கையிருப்புக் கரையும். சுமுகமான சூழ்நிலையே காணப்படும்.

**மிதுனம்:** மனதில் தெய்வபக்தி அதிகரிக்கும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். உடல் ஆரோக்கியம் மேம்படும். மற்றவர்களுடன் பேசும் போது மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. பொறுமை அவசியம்.

**கடகம்:** எதிர்பார்க்கும் காரியங்கள் சாதகமாக முடியும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. கருத்து வேறுபாடு ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும். வீண் செலவுகள் மனச்சஞ்சலத்தை ஏற்படுத்தும்.

**சிம்மம்:** வழக்கமான பணிகளில் மட்டுமே கூடுதல் கவனம் செலுத்தவும். சில சங்கடங்கள் ஏற்படும். செலவு செய்ய நேரிடும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். முருகப்பெருமான் வழிபாடு நன்று. வருமானத்தில் எதிர்பாராத தடை தோன்றும்.

**கன்னி:** பணப்புழக்கம் அதிகரிக்கும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் பொருள்சேர்க்கைக்கும் வாய்ப்பு உண்டு. மகிழ்ச்சி ஏற்படும். இலாபம் அதிகரிக்கும்.

**துலாம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். முடிவு ஒன்றை துணிச்சலுடன் எடுப்பீர்கள். வீட்டில் கலகலப்பான சூழ்நிலை காணப்படும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். பிள்ளைகள் கேட்டதை மகிழ்ச்சியுடன் வாங்கித் தருவீர்கள்.

**விருச்சிகம் :** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். சிலருக்கு வீட்டில் தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படக்கூடும். உணவு விடயத்தில் கவனம் தேவை.

**தனுசு:** மனதில் இனம் தெரியாத குழப்பம் ஏற்படும். புதிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டாம். உறவுகளால் செலவுகள் ஏற்படும். குழப்பம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. பெரியவர்களுடன் அனுசரித்துச் செல்லவும்.

**மகரம்:** மனதில் தைரியம் அதிகரிக்கும். புதிய முயற்சிகளில் ஈடுபடலாம். தந்தை வழி உறவினர்களால் காரிய அனுகூலம் ஏற்படும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. மனவருத்தங்கள் நீங்கும்.

**கும்பம்:** பிறருக்குக் கொடுத்த கடன் திரும்பக் கிடைக்க வாய்ப்பு உள்ளது. எதிர்பார்த்த காரியம் இழுபறியானாலும் முடிந்துவிடும். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும். காரியம் சாதகமாக முடியும்.

**மீனம்:** பொறுமையும் சகிப்புத்தன்மையும் அதிகம் தேவைப்படும். வீண்மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. புதிய முயற்சியைத் தவிர்ப்பது நல்லது. சிலருக்கு எதிர்பாராத செலவுகள் ஏற்படும். சமாளித்துவிட முடியும்.

## வல்லிபுர ஆழ்வார் மஹோற்சவம்

யாழ்ப்பாணம், ஓக.24

யாழ்.வடமராட்சி, துன்னாலை அருள்மிகு ஸ்ரீவல்லிபுரம் ஆழ்வார் சுவாமி கோயில் மஹோற்சவப் பெருவிழா அடுத்தமாதம் 2 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.15 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 15 நாள்கள் நடைபெறும் உற்சவத்தில் 16 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.15 மணிக்கு தேர்த் திருவிழாவும், மறுநாள் செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு தீர்த்த உற்சவமும் இடம்பெறவுள்ளன. (ச-25)

## விருது வழங்கல்



யாழ்ப்பாணம், ஓக.24

நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும் மூத்த கூட்டுறவாளருமான சி.சிவமகாராசாவின் 18 ஆம் ஆண்டு நினைவுதின நிகழ்வில் யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவரும் கூட்டுறவுத்துறையில் பல வருடம் அனுபவம்மிக்க கூட்டுறவாளருமான ம.ஜெ.சுஜிந்திரனுக்கு கூட்டுறவுப் பிதா 'சிவமகாராசா' விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கே.சந்திரசேகரன் விருதை வழங்கிவைத்தார். (ச-25,17)

## சுதர்சன ஹோமம்

யாழ்ப்பாணம், ஓக.24

கைதடி வீரகத்திப் பிள்ளையார் கோயில் முதலாய கோவில்கள் சுதர்சன ஹோமம் எதிர் வரும் செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு இடம்பெறவுள்ளது.

கைதடி வீரகத்திப் பிள்ளையார் கோவிலில் எழுந்தருளியிருக்கும் பூலட்சுமி மஹாலட்சுமி சமேத வெங்கடேஸ்வரப் பெருமானுக்கு கிருஷ்ண ஜெயந்தியை முன்னிட்டு மஹாவிஷ்ணுவுக்கு பிரியமான சுதர்சன ஹோமமும், விசேட அபிஷேக ஆராதனைகளும் நடைபெறவுள்ளன.

உபயத்தில் பங்குகொள்ள விரும்பும் அடியார்கள் குடும்பத்துக்கு ரூபா 500 ஐ செலுத்தி, பெயர் நட்சத்திரங்களைப் பதிவு செய்வதுடன், ஹோம நாளன்று காலை 8 மணிக்கு முன்னராக வருகைதந்து ஒத்துழைப்பு வழங்குமாறு பரிபாலன சபையினர் அறிவித்தனர். (ச-45-159)

## கூட்டுப்பிரார்த்தனை

யாழ்ப்பாணம், ஓக.24

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் யாழ். நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணி மண்டபத்தில் கூட்டுப்பிரார்த்தனை நிகழ்வுகள் செப்ரெம்பர் 2ஆம் திகதி திங்கட்கிழமை வரை இடம் பெறவுள்ளன.

ஆனைக்கோட்டை, சாவல்கட்டு அத்திக்குழி அருள்மிகு ஞானவைரவர் காளி அம்பாள் தேவஸ்தான பஜனைக் குழுவினரின் பஜனை நிகழ்வு இன்று சனிக்கிழமை இடம்பெறவுள்ளது. (ரி)

## சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம்



சாவகச்சேரி, ஓக. 24

மட்டுவில் வடக்கைச் சேர்ந்த சாவகச்சேரி மகளிர் கல்லூரி ஆசிரியை திருமதி பவளம் பிரபாஸ்கரன் சாவகச்சேரி நீதிமன்ற நீதிபதி ஏ.ஜூட்சன் முன்னிலையில் சமாதான நீதிவானாக கடந்த செவ்வாய்க்கிழமை சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். (ரி-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# எப்படி..? எங்கிருந்து...?

2025ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் அரச ஊழியர்களின் ஊதியம் குறைந்தது 24 வீதத்தால் அதிகரிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது. போதாததற்கு வாழ்க்கைச் செலவுப் படியாக மாதாந்தம் 25 ஆயிரம் ரூபா வீதம் மூன்று ஆண்டுகளுக்கு வழங்கப்படும் என்றும், ஓய்வூதியர்களுக்கு மாதாந்தம் 12 ஆயிரம் ரூபா வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. அரச ஊழியர்களின் ஊதியத்தை அதிகரிப்பது தொடர்பான அறிவிப்புகள் உண்மையில் வரவேற்கப்பட வேண்டியவையே. ஆனால், இந்த அறிவிப்புகள் உண்மையில் ஆத்மார்த்தமானவைதானா? சாத்தியமானவையா? என்ற கேள்விகளும் எழாமலில்லை.

இரண்டு வருடங்களுக்கு முன்னர், நாடு மிகப்பெரும் பொருளாதார நெருக்கடிக்குள் வீழ்ந்தது. ஜனாதிபதியாக கோத்தாபய ராஜபக்ச முன்னெடுத்த தவறான பொருளாதாரத் திட்டங்களும், அவரால் நடைமுறைப் படுத்தப்பட்ட பொருத்தமற்ற வரிக்கொள்கைகளுமே நாட்டின் பொருளாதார நெருக்கடிகளுக்குப் பிரதான காரணமாகின. இதன் விளைவாக ஏற்பட்ட மக்கள் கொந்தளிப்பால் அவர் ஆட்சியைக் கைவிட்டோடினார். ஆனால், கோத்தாபய ராஜபக்ச மீதும், இந்த நாட்டின் பொருளாதாரத்தை, வளத்தை, பணத்தை சுரண்டி வேட்டையாடிய ஊழல் பெருச்சாளிகள் மீதும் விழவேண்டிய பழிச் சொற்களையும், கல்லெறிகளையும் வாங்கிக் குவித்ததென்னமோ அப்பாவி அரச அலுவலர்கள் தான்.

நாட்டுக்கு அரச அலுவலர்கள் சுமையாக இருக்கின்றனர். நாட்டின் மக்கள் தொகையுடன் ஒப்பிடுகையில் பல்லாயிரம் அரச அலுவலர்கள் மேல்மிச்சமாக இருக்கின்றனர். கூடுதல் அரச ஊழியர்களால் கூடுதலான சுமைகள் நாட்டு மக்கள் மீது ஏற்றப்பட்டிருக்கின்றன என்று தீண்டத் தகாதவர்களாகவும், 'வேண்டத் தகாதவர்களாகவும்தான் அரச ஊழியர்கள் நடத்தப்பட்டனர். இந்த வசைச்சொற்களில் கணிசமானவை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் இருந்தும் அவர் தரப்பினரிடம் இருந்துமே வந்து பாய்ந்தன. அரசியல் இலாபங்களுக்காக நீங்கள் அளவுக்கதிகமான நியமனங்களை வழங்கிவிட்டு பின்னர் அரச அலுவலர்களை நொந்து கொள்வதில் என்னதான் பயன்? ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தரப்பினர் அன்று காட்டிய முகத்துக்கும், செங்கம்பளம் விரிக்காத குறையாக இன்று வெளிப்படுத்தியிருக்கும் அதீத அக்கறைமிகு அறிவிப்புகளுக்கும் இடையிலான இடைவெளி மிகப்பெரியது. ஆதலால்தான் இந்த அறிவிப்புகள் அனைத்தும் ஆத்மார்த்தமானவையா? அல்லது தேர்தல் பின்னணியைக் கொண்டவையா? என்று எண்ணவேண்டியிருக்கின்றது.

2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் இப்பேர்ப்பட்ட சலுகைகளை வழங்கமுடிகின்றது என்றால், இந்தக் குறுகிய காலத்துக்குள் இந்தத் திட்டத்தைச் சாத்தியப்படுத்தக்கூடிய நிதிமூலம் எங்கிருந்து கிடைக்கப் பெறும்? என்ற தெளிவுபடுத்தலை அரசாங்கம் வழங்க வேண்டும். அதிலும் அரச ஊழியர்களுக்கு மாதாந்தம் 25 ஆயிரம் ரூபா வீதம் மூன்று வருடங்களுக்கும், ஓய்வூதியர்களுக்கு மாதாந்தம் 12 ஆயிரம் ரூபா வீதமும் வழங்குவதற் கான பணத்தின் நிதிமூலம் என்ன? என்பதை வெளிப்ப டுத்தவேண்டியது மிகமிக முக்கியமானது. இவ்வளவு பெரிய தொகைகளை வாரி இறைக்கக்கூடிய வகையில் இலங்கை, தன் உள்நாட்டு வர்த்தகச் சுழற்சியை இன்னமும் பெருக்கியதாகவில்லை. பணத்தை அச்சிடுவதற்கு சர்வதேச நாணய நிதியம் ஏகப்பட்ட நிபந்தனைகளை விதித்திருக்கின்றது. ஆக, அரச ஊழியர்களின் ஊதியங்களை அதிகரிப்பதற்காக அப்பாவி மக்கள் மீது கூடுதல் வரிகள் விதிக்கப்படவுள்ளதா? என்ற சந்தேகம் பலமாக எழவே செய்கின்றது.

தேர்தல் காலம் என்றாலே, இலங்கையில் தேனும் பாலும் ஓடுகின்ற வாக்குறுதிக் காலம்தான். மறுகேள்வி கேட்காமல்புள்ளடிகளைப் போட்டுப்பழக்கப்பட்டதால் தான் எம் நாட்டைத் தூக்கி நிறுத்த இந்தியாவும், நாணய நிதியமும் இன்று தேவைப்படுகின்றது. எப்படி...? எங்கிருந்து...? எவ்வாறாக...? எதற்காக...? என அவ்வப் போது கேட்டுவிடல் அனைத்திலும் ஆரோக்கியமே!




# தமிழரசில் பெரும்பான்மையானோர் பொதுவேட்பாளருக்கே ஆதரவு!

**கிளிநொச்சி, ஓக. 24**

**சுமந்திரன், சாணக்கியன், சிவஞானம் போன்ற சிலரே பொது வேட்பாளரை எதிர்க்கின்றனர். அவர்களுக்கு மக்கள் பாடம் கற்பிப்பார்கள் என நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.**

கிளிநொச்சியில் பொது வேட்பாளருக்கு ஆதரவாகப் பரப்புரையை ஆரம்பித்து வைத்து ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ்ப் பொது வேட்பாளருக்கு தமிழரசுக்கட்சியில் மிகப் பெரும்பாலானவர்கள் ஆதரவாக இருக்கின்றார்கள். சுமந்திரன், சாணக்கியன், சிவஞானம் போன்ற ஒரு சிலரைத் தவிர கட்சியின் ஏனைய மேல் மட்டங்களும் சரி, ஏனைய கட்சியின் கீழ் மட்ட தொண்டர்களும் சரி பொது வேட்பாளர் வெற்றி பெறவேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறார்கள்.

ஒருசிலர் தங்களுடைய சொந்தக் காரணங்களுக்காக இவ்வாறு எதிர்க்கின்றனர். வாங்கிய பணத்துக்கு பேசவேண்டும் என்ற நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டிருக்கிறார்கள்.

தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்கு தீர்வைக் காணவேண்டும் என அவர்கள் யோசித்தால், அதற்காக அவர்கள் சில நல்ல முடிவுகளை எடுப்பார்கள் என்று நம்புகிறேன் - என்றார். (ஒ-27)

## இந்திய 'ஆதர் சக்தி' இலங்கையில் தடம்

இந்தியாவின் ஆதர் சக்தி நிறுவனம் அடுத்த மூன்று மாதங்களில் இலங்கையில் கால் பதிக்கவுள்ளது.

ஆதர் சக்தி நிறுவனம் மின்சார வாகனங்களை உற்பத்தி செய்வதில் முன்னணியில் திகழ்கிறது. கடந்த வருடம் நேபாளத்தில் தனது சேவையை விஸ்தரித்த ஆதர் சக்தி நிறுவனம் அடுத்த மூன்று மாதங்களில் இலங்கையிலும் தனது சேவையை ஆரம்பிக்கவுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. (ச-22-6)

இந்திய அரசால்

## மலையக மக்களுக்கு 10 ஆயிரம் வீடுகள்

மாத்தளை, ஓக. 24

மலையக தோட்டத்தொழிலாளர்களுக்கு இந்திய அரசால் 10 ஆயிரம் வீடுகள் அமைத்துக்கொடுக்கப்படவுள்ளன. இதில் 4 ஆயிரம் வீடுகளை மாத்தளை மாவட்டத்தில் இந்திய அரசு நிர்மாணித்து வழங்கி வைக்கப்பட்டுள்ளது. இந்த வீடுகளில் குடியிருக்கும் குடியிருப்பாளர்களுக்கு 4ஆயிரம் சோலர்லாம்புகளையும் இந்தியா அன்பளிப்புச் செய்துள்ளது. (ச-22,6)

## குரங்கம்மை; கண்டறிய விசேட திட்டம்

யாழ்., ஓக. 24

நாட்டில் குரங்கம்மை நோய்த் தொற்று பரவுதலை கண்டுபிடிப்பதற்கு விசேட திட்டமொன்று நடைமுறைப் படுத்தப்படவுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

நாடு முழுவதும் உள்ளடங்கக்கூடிய வகையில் இந்த திட்டம் நடைமுறைப்படுத்தப் படவுள்ளது. (ச-இ)

## அடிக்கடி வரும் அமெ. கப்பல்கள்

கொழும்பு, ஓக. 24

இலங்கை - கொழும்பு துறைமுகத்துக்கு 24 மணித்தியால இடைவெளியில் இரண்டு அமெரிக்க நாசகாரி கப்பல்கள் பயணம் மேற்கொண்டுள்ளன. கடந்த புதன்கிழமை வருகைதந்த கப்பல் யு.எஸ்.எஸ். ஓகேன் நேற்று முன்தினம் வியாழக்கிழமை புறப்பட்டுச் செல்ல யு.எஸ். எஸ். அர்லீர்க் பேர்க் வருகை தந்துள்ளது. இந்தக் கப்பல்கள் எரிபொருள் நிரப்புவதற்காகவே கொழும்பு துறைமுகத்துக்கு வருகைதந்ததாக கடற்படைத்தலைமையகம் தெரிவித்துள்ளது. (ச-22,6)

**நாளை**

25.08.2024

ஞாயிற்றுக்கிழமை - ஆவணி - 09

சுபநேரம் : 09.05 - 10.35

ராகுகாலம் : 04.35 - 06.05

2 ஆம் ஆவணி ஞாயிறு

**நாளொரு நல்வார்த்தை**

எவ்வளவு மெதுவாக செல்கிறீர்கள் என்பது ஒரு விடயமே அல்ல, எவ்வளவு தூரம் நிற்காமல் செல்கிறீர்கள் என்பதே பிரதானம்.

-கன்பூசியஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 27 . 05 . 1942



மறைவு 21 . 08 . 2024

## அமரர் செல்வரத்தினம் யோகரத்தினம்

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும், சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற திரு. திருமதி சபாரத்தினம் செல்வரத்தினம் தம்பதியரின் மகன் திரு. யோகரத்தினம் (றேடியோ திருத்தும் நிபுணர்) கடந்த 21.08.2024 புதன்கிழமை காலை யாழ்ப்பாணத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திருமதி இராஜேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், சிறிபவன் (லண்டன்), வனிதா (லண்டன்), பிரகாஷ் (கனடா), சசிகாந்தன் (பிரான்ஸ்), ஆகியோரின் பாசமிகுந்த தந்தையும், கோமதி, சத்தியபவன், குணாளினி, துஷாந்தி ஆகியோரின் நேசம் நிறைந்த மாமனாரும், அஸ்மிதா, ஆகாஷ், அஷ்வின் , அர்ஜன், அபிஷா, அபிநயா, ஆதிரன், ஆர்ணா ஆகியோரின் அன்பு நிறைந்த பாட்டனாரும், காலஞ்சென்ற ஜெயரத்தினம் (யாழ்ப்பாணம்), சந்தானலட்சுமி (பிரான்ஸ்), ஜெயலட்சுமி (திருகோணமலை), ஜெயசோதி (யாழ்ப்பாணம்), ஞானரத்தினம் (யாழ்ப்பாணம்) ஜீவரத்தினம் (இந்தியா), கணேசரத்தினம் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (25.08.2024) ஞாயிற்றுக்கிழமை வைற் ஹவுஸ் அந்திய கால சேவை (White House Funeral Service) இல.180 பிரதான வீதி, யாழ்ப்பாணம் (180, Main Street, Jaffna) பார்வைக்கு வைக்கப்பட்டு, இறுதிக் கிரியைகள் காலை 8.00 மணியளவில் நடைபெற்று 9.30 மணியளவில் கோம்பயன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும் .

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

அறிவிப்பு:
**சோகத்தில் தவிக்கும் பிள்ளைகள்**

(CS 1193) V-1

# மரண அறிவித்தல்



மண்ணில் 24.04.1974

விண்ணில் 23.08.2024

## திருமதி இன்பநாதன் அருந்ததி (ரேணுகா)

கண்ணாபுரம், வில்லூன்றி, யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும், வாழ்விடமாகவும் தற்போது கைதடி கிழக்கு, கைதடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இன்பநாதன் அருந்ததி 23.08.2024 வெள்ளிக்கிழமையன்று காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான இரகுநாதன் அருந்தவநாயகம் தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற துரைராசா மற்றும் அம்பிகாவதி தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவரான இன்பநாதனின் அன்பு மனைவியும் லோகநாதன் (CEB), சிவநாதன், தர்சினி (VCM Institute), கவிதா ஆகியோரின் அன்புச் சகோதரியும் விஜயலட்சுமி, கோணேஸ்வரி, கிருஷ்ணசாமி, பேரின்பநாதன் அமரர் ரவிச்சந்திரன், ஜெகநாதன் (லண்டன்), புஸ்பநாதன், அகிலாண்டஈஸ்வரி, திருலோகநாதன் (லண்டன்), தவநந்தினி, உஷாந்தினி ஆகியோரின் மைத்துனியும் சுவனிகாவின் அன்புப் பெரியதாயும், அபிராமி, கீர்த்திகா, சுவஸ்திகா, கீர்த்திகன் ஆகியோரின் அன்பு அத்தையாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (25.08.2024) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 8.00 மணியளவில் கிரியைகள் நடைபெற்று பூதவுடல் கைதடி கிழக்கு ஊற்றல் இந்து மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கைதடி கிழக்கு,
கைதடி.

தகவல்
**குடும்பத்தினர்**

# மரண அறிவித்தல்

தோற்றம் 28 . 09 . 1950



மறைவு 23 . 08 . 2024

## கைலாயபிள்ளை கணேசலிங்கம்

திருநெல்வேலி பத்திரகாளி கோவிலடியைப் பிறப்பிடமாகவும், கொழும்பு மட்டக்குளி தற்போது திருநெல்வேலி கேணியடியை வசிப்பிடமாகவும் கொண்ட கைலாயபிள்ளை கணேசலிங்கம் அவர்கள் நேற்று (23.08.2024) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கைலாயபிள்ளை - மாரிமுத்து தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான நடராசா - அன்னபாக்கியம் தம்பதியரின் மூத்த மருமகனும், சாந்தினியின் அன்புக் கணவரும், தன்யா, சுபாங்கினி, சிந்தூரி, நிவேதனா ஆகியோரின் அன்புத் தந்தையும், அபராஜிதன், கண்ணன், ஜனார்த்தனன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**ந.சாந்தகுமார்**
**077 348 6983**

கேணியடி ஒழுங்கை,
திருநெல்வேலி வடக்கு.

(CS/1195) J-1

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

மலர்வு 15 . 06 . 1973



உதிர்வு 24 . 07 . 2024

அராலியைப் பிறப்பிடமாகவும் மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கடந்த 24.07.2024 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

## அமரர் பழனித்துரை இந்திரகுமாரன்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (25.08.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்திதல் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**(இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.)**

மில்லேன்,
மல்லாகம்.

**குடும்பத்தினர்.**

(CS 55878) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட்டுக்கோட்டை துணவி ஆலய மீளுருவாக்கப் பணி ஆரம்பம்

**யாழ்ப்பாணம், ஓக. 24**

**2016 ஆம் ஆண்டு அழிவடைந்த நிலையில் அடையாளம் காணப்பட்ட வட்டுக்கோட்டை துணவி ஆலயத்தை மீள்உருவாக்கம் செய்யும் பணி யாழ்ப்பாண மரபுரிமை மையத்தின் தலைவர் வாழ்நாள்பேராசிரியர் புஸ்பரட்ணம் தலைமையில் நேற்றுமுன்தினம் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.**

இவ்வாலயத்தின் கற்பக்கிரகத்தின் பின்புறத்தில் பொறிக்கப்பட்ட கிரந்த எழுத்து சாசனத்தின் அடிப்படையாகக்கொண்டு 400 வருடங்கள் பழமை வாய்ந்த ஆலயமென்பதுடன் இவ்வாலயத்தின் பெயர் பிரகேதீஸ்வரர் என்பதனையும் இந்தக் கல்வெட்டில் இருந்து உறுதிப்படுத்திக்கொள்ள முடிகின்றது.

அத்துடன் ஆழிவடைந்த இந்த ஆலயத்தின் எஞ்சிய பாகங்களையும் அத்திபாரங்களையும் அழிபாடுகளையும் கொண்டு ஆலயம் கற்பக்கிரகம், அந்தராளம், முன்மண்டபம், துணைக்கோவில்கள், சுற்றுமதில், மடங்கள், கேணி என்பவற்றைக் கொண்டிருந்தது என்பதனை உறுதிப்படுத்த முடிகின்றது. இந்த ஆலயம் பல ஆண்டு காலம் கவனிப்பார் இன்றிக் காணப்பட்ட நிலையில் அதனை மீள்உருவாக்கம் செய்வதற்கு நீண்டகாலம் முயற்சி எடுக்கப்பட்டு வந்தது.

இந்த நிலையில் தற்போது அமெரிக்காவில் வசிக்கின்ற கைதடியைச் சேர்ந்த கலாநிதி சிவயோகநாதனின் மகள் பாலயோகஸ்தினி சிவயோகநாதன் ஆலய மீளுருவாக்கப் பணிக்கு நிதிப்பங்களிப்பைச் செய்துள்ளார்.

அதடிப்படையில் ஆலயத்தை மீள் உருவாக்கம் செய்வதற்குரிய திட்ட முன்மொழிவுகள் தயாரிக்கப்பட்டு, தொல்லியல் திணைக்களத்தின் அனுமதியுடன் யாழ்ப்பாண மரபுரிமைய மையத்தினரால் மீளுருவாக்கம் செய்யப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-26-20-66)

## ஆளுநர் நந்தலாலுக்கு சர்வதேச கௌரவம்!

கொழும்பு, ஓக. 24

மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்கவுக்கு 'ஏ' தர ஆளுநராக பட்டியல் படுத்தப்பட்டுள்ளார்.

சர்வதேசரீதியில் மத்தியவங்கி ஆளுநர்களிடையே மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் அடிப்படையில் நந்தலால் வீரசிங்கவுக்கு இந்த கௌரவம் வழங்கப்பட்டுள்ளது.

பணவீக்கத்தை சீர்செய்தமை, வட்டிவீதங்கள், பல்வேறு சவால்களுக்கு மத்தியில் பொருளாதார ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தியமை போன்ற காரணங்களை அடிப்படையாக வைத்து நந்தலால் வீரசிங்கவுக்கு இந்தத் தனித்துவ கௌரவம் வழங்கப்பட்டுள்ளது. (ச-6)

## 'யுனைட்டெட்' நிறுவனம் இலங்கையில் கால்பதிப்பு

கொழும்பு, ஓக. 24

இலங்கையில் 150 சில்லறை விற்பனை நிலையங்களினூடாக யுனைட்டெட் பெற்றோலியம் நிறுவனம் தனது விநியோகத்தை ஆரம்பிக்கவுள்ளது.

இந்த நிலையில் அவுஸ்திரேலியாவின் யுனைட்டெட் பெற்றோலியம் நிறுவனம் இம்மாதம் 28 ஆம் திகதி முதல் விற்பனையை ஆரம்பிக்கவுள்ளது. அதேவேளை யுனைட் டெட் பெற்றோலியம் இலங்கையில் கால்பதிக்கும் நான்காவது எரிபொருள் விற்பனைநிறுவனம் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ச-22-6)

## மருத்துவர் அர்ச்சுனா வழக்கு ஒத்திவைப்பு



மன்னார், ஓக. 24

மன்னார் பொது மருத்துவமனையில் உயிரிழந்த இளம் தாயின் சம்பவம் தொடர்பாக நீதி கோரும்முகமாக அத்துமீறி மருத்துவமனைக்குள் உட்புகுந்ததாகக் கூறப்பட்ட மருத்துவர் அர்ச்சுனாவின் வழக்கு தவணையிடப்பட்டுள்ளது.

பொது மருத்துவமனையில் இளம்தாய் ஒருவருக்கு சிகிச்சை அளிக்காத காரணத்தால் மரணத்தை தழுவியதான சம்பவம் தொடர்பில் தகவல் சேகரிக்கும் நோக்குடன் மருத்துவர் அர்ச்சுனா மன்னார் பொது மருத்துவமனைக்குச் சென்றிருந்தார். அவர் அங்கு கடமையில் இருந்தவர்களுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்தியிருந்தாரென மன்னார் மருத்துவமனை நிர்வாகத்தால் மன்னார் பொலிஸில் முறைபாடு செய்யப்பட்டது.

முறைப்பாட்டுக்கமைய கடந்த 3ஆம் திகதி அவர் கைதுசெய்யப்பட்டு, 7ஆம்திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டு பின் பிணையில் விடுதலை செய்யப்பட்டிருந்தார்.

இந்த வழக்கு மீண்டும் கடந்த புதன்கிழமை மன்னார் மாவட்ட நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்காக எடுக்கப்பட்டபோது எதிர்வரும் 25ஆம் திகதிக்கு வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது. (ச-60)

## கட்டுநாயக்க விமான நிலைய 6 கருமபீடங்கள் தனியாருக்கு

கொழும்பு, ஓக. 24

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திலுள்ள உல்லாசப்பயணிகள் வருகைதரும் ஆறு கருமபீடங்கள் நான்கு தனியார் நிறுவனங்களுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன. விமான நிலைய சுற்றுலாச் சாரதிகள் சங்கம், ஆயுபோவன் ரவல்ஸ், அவைவா ரூர்ஸ், லங்கா ரவல் ஏஜென்ட் ஆகிய நிறுவனங்களுக்கே இந்த கருமபீடங்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்த கருமபீடங்கள் மூன்று வருட குத்தகைக்கே வழங்கப்பட்டுள்ளன. ([illegible])

## பதினம் தெரியுமோ?

ஏறச்சொன்னால் எருதுக்கு கோபம், இறங்கச்சொன்னால் முடவனுக்கு கோபமெண்ட கதைதான் இப்ப யாழ்ப்பாணக் கம்பஸில நடக்கிற கதகளியளைப் பாக்கேக்க நினைவுக்கு வருகுது. ராக்கிங் எண்டவதையை இல்லாமல் ஆக்கினால் தான், கம்பஸ் உருப்படும் எண்டு காலகாலமாச் சொல்லி, இப்ப ஓரளவுக்கு ராக்கிங் எண்டதையே யாழ்ப்பாணத்தில இல்லாமல் ஆக்கிப்போட்டினம். ஆனால் 'ராக்கிங் இருந்தால் தான் கம்பஸில பெடியள் ஒழுக்கம இருப்பினம். இப்ப ராக்கிங் இல்லாததால கண்டபடி ஆடுறாங்கள்' எண்டு அங்க படிக்கிற பொம்பிளைப் பிள்ளையளே சொல்லுகினம். இப்பிடி ராக்கிங்கை திரும்ப கூப்பிடுறளவுக்கு அப்பிடி என்னதான் கம்பஸில நடக்குது?

முந்தியெண்டால் பைனல் இயர் (நான்காம் வருடம்) படிக்கிற ஆக்கள் தான் கம்பஸில எல்லாருக்கும் ஓர்டர் போடுவினம். சீனியரைக் கண்டாலே ஜூனியர்மாருக்கு குலைநடுங்கும். சீனியர் என்ன சொன்னாலும் அதைக் கேட்டு நடப்பினம். அதால லெக்சர்மாரும், கம்பஸ் நிர்வாகக்காரரும் எதையும் பெடியளுக்கு சொல்லோணுமெண்டால் அதை சீனியர்ஸ் மூலம் தான் சொல்லிச் செய்விப்பினம். அப்பதான் அந்த வேலை சரியா நடக்கும். ஆனால் இப்ப அதெல்லாம் தலைகீழாம். இரண்டாம் வருடம் படிக்கிற ஆக்களே சீனியர்ஸோட கொழுவல் எடுக்கினமாம்.

போன சனிக்கிழமை கம்பஸில ஒரு 'கோயிங் டவுன்' பார்ட்டி. ஏழுமணிக்கே முடிக்க வேண்டிய பார்ட்டியை 8 மணி தாண்டியும் இழுத்திருக்கினம். 'டீஜே' பார்ட்டி எண்டதால எல்லாரும் ஆடவும் தொடங்கிட்டினம். நேரம் ஏற ஏற, உள்ளுக்க போனதும் ஆக்களுக்கு ஏத்தியிருக்கு. அந்த சுதியில கொஞ்சம் கொஞ்சமா தங்களுக்குள்ள கதைக்க வெளிக்கிட்டு, அந்தக் கதை முத்தி 'தேர்ட் இயருக்கும்', 'பைனல் இயருக்கும்' அடிபாடா மாறிப் போட்டுது. 2 பேருக்கு மண்டை உடைஞ்சதெண்டும் கதை. அதைவிட உள்ளுக்க அடிவாங்கின ஆக்கள் கம்பஸில படிக்காத வெளிப்பெடியளுக்கு அடிச்சு விசயத்தைச் சொல்ல, அவங்கள் கம்பி, பொல்லோட கம்பஸுக்கு வெளியில வந்து குவிஞ்சிருக்கினம். பிறகு ஒருமாதிரி டீனுக்கு அறிவிச்சு, அவர் வந்து தான் விலக்குப் பிடிச்சு, அந்தப் பார்ட்டி இன்னும் ரத்தக்களறி ஆகாமல் நிப்பாட்டினதாம். ஆனால் உந்தக் கம்பஸ் சண்டை ஒருநாளோட முடியிறதில்லைத்தானே? பிறகும் தொடர்ந்திருக்கு. அதால வந்த விசயங் களைப் பார்த்திட்டுத்தான் 'பேசாமல் ராக்கிங்கை ஒழிக்காமல் விட்டிருக்கலாம்' எண்டு கம்பஸில படிக்கிற நோக்கத்தில போன பிள்ளையள் கதறுதுகள். உந்த 'டீஜே' பார்ட்டி சண்டைக்குப் பிறகு அப்பிடி என்ன சம்பவங்கள் நடந்ததெண்டு திங்கக்கிழமை பாப்பமோ?

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவலைகள்

பிறப்பு 09 • 10 • 1975

இறப்பு 04 • 09 • 2023



## இராசேந்திரம் நிக்சன்

அதிபர்,
(மு / கல்விளாங்குளம் மகாவித்தியாலயம்.
அகில இலங்கை சமாதான நீதவான் (JP)

***திதி: தேய்பிறை பஞ்சமி ( 24.08.2024)***

ஆண்டொன்று சென்றதுவோ
ஆற்றமையால் தவிக்கின்றேன்
அன்பு முகம் காணாமல் கண்ணீரில் கரைகின்றோம்.

இன்பமாய் இல்லறம் ஈய்ந்தெனை ஆட்கொண்டு
துன்பம் துயர் காத்து தூயவரே நின்பாதையில்
நின் புகழ் மேம்பட உம் நிழல்போல் வாழ்ந்தேனிங்கு!
ஆருயிர் அன்பனே உமை ஆண்டவன் சொந்தமாக்க
ஆறாத்துயரில் வாழ்கின்றேன் நானிங்கு
காற்று பெருவெள்ளம் போல்
சீற்றம் கொள்ளுது என் துன்பம்
கருணை உள்ளம் கொண்டவரே
கைகொடுத் தென்னை ஆற்றவாராயோ

இறுதிவரை என்னோடிருப்பீர் என்று
இறைவனை வேண்டி நின்றேன்
இது காணும் வாழ்ந்தது போதுமென்று
இடையிலே சென்று மறைந்தீரோ!

கதியோதும்மின்றி கலங்கி நிற்கின்றேனே
பொல்லாத உலகமதில் நல்லாரெவருமில்லை
புண்ணியனே உம் ஆத்மா
சாந்தியடைய என் இரு காரம்
கூப்பி நிற்கின்றேன்.

நாவலி தெற்கு,
அரசடி, மானிப்பாய்.

(cs.1175) (N-1)

பிரிவால் துயருறும்
**மனைவி**

# நெல் உலரவிடுவதில் விவசாயிகள் அவதி

யாழ்ப்பாணம், ஓக.24

முல்லைத்தீவில் விவசாயிகள் நெல்லைக் காய விடுவதற்குப் பொருத்தமான தளங்கள் இல்லாதத னால் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவித்துள்ளனர்.

வீதிகளில் நெல்லைக் காயவிடுவ தனால் விபத்து கள் ஏற்படுவதால் அதற்கும் பொலிஸார் தடை விதித்துள்ளனர். எனவே கிராமங்களில் நெல்லைக் காய விடுவதற்கான தளங்கள் அமைக்காவிடின் விவசாயிகள் பெரும் அவலத்தை எதிர் கொள்ள நேரிடும் என்றும் அவர்கள் குறிப்பிட்டனர்.

(ரி-500)

# சாதனையாளர்கள் கௌரவிப்பு!




வவுனியா, ஓக.24

க.பொ.த. (உ/த) 2023 இல் பரீட்சைக்குத் தோற்றி கணித, விஞ்ஞான, கலை, வர்த்தகப் பிரிவுகளில் வவுனியா மாவட் டத்தில் முதல் 20 நிலைகளைப் பெற்ற மாணவர்களும், தொழில்நுட்பப் பிரிவில் முதல் 5 நிலைகளைப் பெற்ற மாணவர்களுக்கும் "RIRA நீறா கல்வி விருதுகள்" வழங் கப்பட்டன.

(ச-45-110)

## தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம் விசேட பொதுக்கூட்டம்

எமது சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் எதிர் வரும் 01.09.2024 ஞாயிற்றுக்கிழமை அன்று பிற்பகல் 2.00 மணியளவில் சங்கப் பணிமனையில் நடைபெறவுள்ளது. முக்கிய தீர்மானங்கள் எடுக்க இருப்பதால் அனைத்து அங்கத்தவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

(CS/56008) J-1

செயலாளர்

## பயிற்சிப்பட்டறை

வவுனியாப் பல்கலைக்கழகத்தின் பிர யோக விஞ்ஞான பீடத்தின் பௌதீக விஞ் ஞானத்துறை க.பொ.த. உயர்தர பௌதீக வியல் ஆசிரியர்களுக்கான மின்னணு வியல் பயிற்சிப் பட்டறை வவுனியாப் பல்கலைக்கழகத்தின் பௌதீக விஞ்ஞா னத் துறையின் சிரேஷ்ட விரிவுரை யாளர் சி. குகநேசன் ஒழுங்கமைப்பில் இங்கி லாந்தின்ரத்னம் அறக்கட்டளையின் நிதி யுதவியு டன் வவுனியாப் பல்கலைக்கழக பௌதீக விஞ்ஞானத் துறையின் மின் னணு ஆய்வகத்தில் கடந்த பதினாறாம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

(ச-45)

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

# மரண அறிவித்தல்

## சின்னத்துரை விநாயகமூர்த்தி



தோற்றம் 14.01.1933

மறைவு 20.08.2024

யாழ்ப்பாணம் கோப்பாயைப் பிறப்பிடமாகவும், நீர்வேலி மத்தியை வதிவிடமாகவும் கொண்டு கனடாவில் சிலகாலம் வசித்தவருமான சின்னத்துரை விநாயகமூர்த்தி கடந்த 20.08.2024 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - சரஸ்வதி தம்பதி யரின் மூத்த புதல்வனும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி - மகேஸ்வரி தம்பதியரின் மருமகனும், புனிதவதியின் அன்புக் கணவரும், காலஞ் சென்றவர்களான இரத்தினம் (மனோன் - ஆசிரியர்), கந்தசாமி (ராசன் - ஆசிரியர்) ஆகியோரின் சகோதரனும், சூரியகலா, விக்னேஸ்வரன், சூரியபிரபா, சூரியலதா, சூரியமாலா, குகனேஸ்வரன், சூரியநிஷா ஆகியோ ரின் அன்புத் தந்தையும், இரவிகாந்தநாதன், சுதாமதி, சிவதாசன், பிரசாந், சிவகுமார், நீரூஜா, இரவீந்திரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், யாழினி, விஜித், விஷ்ணுகா, நிஜானி, லசிகா, அபிராம், கிருஷன், தமிழ்வாகை, மகிழ்வாகை, இதழ்வாகை, அக்ஷயா, அக்ஷயன் ஆகி யோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.08.2024) ஞாயிற்றுக் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 11.00 மணியளவில் நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

மடத்தடி வீதி,
நீர்வேலி மத்தி,
நீர்வேலி.

தொடர்பு: 077 484 6660
(மருமகன்)

(CS/55992 N-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திய மீனவர்களை

# ரணிலும், டக்ளஸும் கட்டுப்படுத்திவிட்டனர்

சம்மேளன முன்னாள் தலைவர் புகழாரம்

யாழ்ப்பாணம், ஓக. 24

வடபகுதி கடலில் அத்துமீறிய இந்திய கடற்றொழிலாளர்களின் வருகையை கடந்த ஜனாதிபதிகளைப் பார்க்கிலும் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதாக யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சமாசங்களின் சம்மேளன முன்னாள் தலைவர் புனித பிரகாஷ் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அத்துமீறிய இந்திய இழுவைப் படகுகளால் இன்று நேற்று அல்ல நீண்ட காலமாக எமது கடற்றொழிலாளர்கள் பாதிக்கப்பட்டு வருகிறார்கள். ஒவ்வொருமுறையும் ஆட்சிக்கு வரும் ஜனாதிபதிகளிடம் நாம் எமது பிரச்சினையைக்கூறியும் எமக்கான நிரந்தரத் தீர்வு இதுவரை முன்வைக்கப்படவில்லை.

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடமும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடமும் இவற்றை நிறுத்துமாறு கோரிக்கை முன்வைத்தோம்.

கடந்த காலங்களைப்போல் அல்லாமல் இலங்கை கடற்பரப்புக்குள் நுழையும் இந்திய மீன்பிடிப் படகுகள் கடற்படையினரால் கைதுசெய்யப்படுகின்றன. இந்த நடவடிக்கை மீனவ மக்களிடம் சற்று ஆறுதல் அளிப்பதுடன் தொடர்ந்து அத்துமீறி நுழையும் இந்தியப் படகுகளை கைது செய்து சட்டத்தின் முன்நிறுத்தவேண்டும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எமது கோரிக்கையை கருத்தில் கொண்டு நடவடிக்கை எடுத்து வருவதை பாராட்டுவதோடு தொடர்ந்து அவரது செயற்பாட்டுக்கு கடற்றொழில் சமூகம் ஆதரவாகச் செயற்படும் - என்றார். (ஓ-20-27)

# பொதுவேட்பாளர் விடயத்தில் தமிழர்கள் கைகோர்க்க வேண்டும்

முன்னாள் போராளி பசீர் காக்கா கோரிக்கை

**யாழ்ப்பாணம், ஓக. 24**

**நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளராகப் போட்டியிடும் பா.அரியநேந்திரனின் சங்குசின்னத்துக்கு வாக்களிப்பது தமிழர்களின் தேசியக் கடமை எனவும் பொது வேட்பாளர் நோக்கத்துக்காகக் களத்திலும் புலத்திலும் உள்ளவர்களை கைகோர்த்து செயற்பட முன்வருமாறும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மூத்த போராளி பசீர் காக்கா கோரியுள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ்த் தேசிய நிலைப்பாட்டை இறுக்கமாகப் பற்றிக் கொண்டதால் மாவீரரான எமது செல்வங்களின் குடும்பத்தினரும், முன்னாள் போராளிகள் குடும்பத்தினரும், எப்போதும் தேசிய விடுதலைப் போராட்டத்துக்கு உறுதுணையாக எமது மக்களும் தமிழ்ப் பொதுவேட்பாளர் பா.அரியநேத்திரனின் சின்னமான சங்குக்கு வாக்களிக்கத் தவறாதீர்கள். இதனை உங்கள் தேசியக் கடமையாக உளமார ஏற்றுக்கொள்ளுங்கள். உங்கள், உறவினர், நண்பர்களிடமும் இத் தேவையை உணர்த்துங்கள்.

இறுதிப்போர் முடிந்து 15 வருடங்களாகி விட்டது. பேச்சு, பேசுதல் என்பவற்றைத் தொடர்ந்து கேட்டு காது புளித்துப்போய் விட்டது. தமிழரின் ஆறாம் அறிவைக் கேள்விக்குட்படுத்தும் விதத்தில் புதுப் புது விளக்கங்களைக் கேட்டாயிற்று. எனவே, நாம் இனி அடுத்த கட்டத்தை ஜனநாயக வழியில் மேற்கொள்வோம். புலம்பெயர்ந்த நாடுகளில் உள்ள எமது உறவுகள் தமிழ்ப் பொது வேட்பாளருக்குத் தவறாமல் வாக்களிக்கும்படி தமது குடும்பத்தினர், உறவினர், நண்பர்களுக்கு அறிவுறுத்துங்கள். பொது வேட்பாளர் குறித்த விடயத்துக்கு சாத்தியமான எவ்வகையில் உதவ பங்காற்ற முடியுமோ அந்தவகையில் பங்காற்றுங்கள்.

அரியநேந்திரன் 1984ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் அவரது சொந்தக் கிராமமான அம்பிளாந்துறையில் எனக்கு அறிமுகமானவர். போராட்டப் பங்களிப்பு என்பதற்கு மேலாக கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயம் தொடர்பான விடயங்களில் இவரது ஈடுபாட்டை நான் அறிவேன். அதனாலேயே, 2004 பொதுத் தேர்தலில் போட்டியிடத் தேர்வானவர்களில் ஒருவராக இவரது பெயர் கிளிநொச்சியிலிருந்து அறிவிக்கப்பட்டது. இறுதிப் போரின் பின்னர் நெருக்கடிகளின் மத்தியிலும் மாவீரர் நினைவேந்தல்களை எப்படியோ தொடர்ச்சியாகச் செய்து வந்தவர்.

எல்லாவிதத் தடைகளையும் துரோகங்களையும் தாண்டி தமிழ்ப் பொது வேட்பாளர் விடயத்தில் முன்னோக்கிச் செல்வோம். புலம்பெயர் உறவுகளும் தாயகத்திலுள்ளோரும் கைகோர்த்து இதனை சாத்தியமாக்குவோம் - என்றார். (ஓ-20-100)




யாழ்ப்பாணம், ஓக. 24

சண்டிலிப்பாய் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் திருமதி செல்வகுமாரி நேசரட்ணம் தலைமையில் இளம் படைப்பாளிகளை ஊக்கப்படுத்தும் வகையில் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பாடசாலைகளிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கான இலக்கியப் பயிற்சிப் பட்டறை சண்டிலிப்பாய் பிரதேச செயலக கலாசாரப் பிரிவின் ஏற்பாட்டில், சண்டிலிப்பாய் பிரதேச செயலக மண்டபத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது. (ச-45-66)

# தலதா அத்துகோரள இரும்புப்பெண்மணி

கூறுகிறார் வஜிர

கொழும்பு, ஓக. 24

நாடாளுமன்ற உறுப்புரிமையை துறந்துள்ள தலதா அத்துகோரளவை இரும்புப் பெண்மணியென புகழ்ந்துள்ளார் ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்த்தன. நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் கட்சி சம்மேளனத்துக்கு தலதாவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது எனவும், அவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிப்பார் என்ற நம்பிக்கை உள்ளது என்றும் அவர் கூறினார்.

'தலதா அத்துகோரளவின் உரை ஏனையோருக்கும் முன்மாதிரியாக அமைந்துள்ளது. பிளவுபட்டுள்ள ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்கள் ஒன்றிணையவேண்டும் என்ற அழைப்பை அவர் விடுத்துள்ளார். ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க வெற்றிபெற வேண்டியது காலத்தின் கட்டாய தேவையாகும். அவர் தோற்றால் அது நாட்டின் தோல்வியாகவே அமையும். மக்கள் பிரதிநிதிகள்மீது, மக்களுக்கு நம்பிக்கை இல்லையெனில் நாடாளுமன்றத் தேர்தலில் அவர்களை வீட்டுக்கு அனுப்பலாம். எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலென்பது பரிசீலித்துப் பார்ப்பதற்குரிய காலம் அல்ல - என்றார். (ஓ-44)

# தமிழ்ப் பொதுவேட்பாளர்: கனேடியத் தூதுவர் ஆர்வம்

மட்டக்களப்பு மாவட்டத்துக்கு வருகை தந்த கனேடியத் தூதுவருடனான சந்திப்பின் போது, தமிழ்ப் பொதுவேட்பாளர் தொடர்பில் அவர் ஆர்வத்துடன் கேட்டறிந்துகொண்டார் என பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலான மக்கள் பேரெழுச்சி இயக்கத்தின் இணைத்தலைவர் சிவயோக நாதன் சீலன் தெரிவித்துள்ளார். மட்டக்களப்பில் உள்ள ஈஸ்ட் லகூன் விடுதியில் கடந்த புதன்கிழமை பிற்பகல் நடைபெற்ற இந்தச்சந்திப்பின் போது, இலங்கையில் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் தெடர்பாகவும் குறிப்பாக சிவில் சமூகத்தினரால் முன்னெடுக்கப்பட்டுள்ள தமிழ் பொது வேட்பாளர் தொடர்பான விடயங்களை மிகவும் ஆர்வத்தோடு தகவல்களைக் கேட்டறிந்தார். அத்துடன் மட்டக்களப்பு மாவட்டத்தில் காணப்படும் பொதுவான பிரச்சினைகளான, மயிலத்தமடு மாதவணை பிரச்சினை தொடர்பிலும் வாகரைப் பிரதேசத்தில் உருவாக்கப்படவுள்ள இறால் பண்ணை மற்றும் இல்மனைட் அகழ்வு, சட்ட விரோத மணல் அகழ்வு பிரச்சினை, காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம், நில அபகரிப்புகள் போன்ற பல பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார். (ஓ-100)

# பயிற்சிப் பட்டறை

யாழ்ப்பாணம், ஓக. 24

மாவட்டச் செயலக திறன் அபிவிருத்திப் பிரிவின் ஏற்பாட்டில், சுற்றுலாத்துறை அபிவிருத்திக்கான டிஜிற்றல் சந்தைப்படுத்தல் மேம்பாடு தொடர்பான பயிற்சிப்பட்டறை யாழ். மாவட்ட மேலதிக செயலர் க. ஸ்ரீமோகனன் தலைமையில் யாழிலுள்ள விடுதியொன்றில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது.

இதன்போது தெரிவுசெய்யப்பட்ட 40 சிறு முயற்சியாளர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு அவுஸ்திரேலியன் ஏ.ஐ.டி. மற்றும் ஸ்கில்ஸ் போ இன்குளுசிவ் கிரோத் அமைப்பின் அனுசரணையில் பயிற்சி வழங்கப்பட்டது. நிகழ்வில் யாழ். மாவட்ட பதில் செயலர் ம. பிரதீபன் கலந்து கொண்டு பயிற்சி பட்டறையின் முக்கியத்துவம் பற்றி உரை ஆற்றினார். (ச-25,9)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமக்கான தீர்வு கானல் நீரே!

*காணாமலாக்கப்பட்ட உறவுகளின்*
*சங்கத் தலைவி சுட்டிக்காட்டு*

**யாழ்ப்பாணம், ஓக. 24**
**எங்கள் நாட்டில் யார் ஜனாதிபதியாக வந்தாலும் எங்களுக்குத் தீர்வு தரப்போவதில்லை. குற்றம் புரிந்தவர்களை காப்பாற்றக்கூடியவர்கள்தான் மீண்டும் வருவார்கள் என்று முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத் தலைவி ம.ஈஸ்வரி தெரிவித்துள்ளார்.**

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்களின் சங்கத்தின் நிலைப்பாடு தொடர்பில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

யார் ஜனாதிபதியாக வந்தாலும் ஆட்சேபனை இல்லை. எங்களுக்கான தீர்வு கிடைக்காது என்பதுதான் உண்மை. அதனால் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் நாங்கள் சிந்திக்கவில்லை.

ஜனாதிபதியாக வருபவர்கள் குற்றம் புரிந்தவர்களை சர்வதேச நீதிமன்றில் நிறுத்தினால் நாங்கள் அவர்களை வரவேற்போம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ச-19)

வேலையாட்கள் தேவை

இல. 194 யாழ் வீதி மானிப்பாயில் அமைந்துள்ள மிக்ஷர் உற்பத்தி செய்யும் நிறுவனத்திற்கு பெண், வேலையாட்கள் தேவை

தொடர்புகளுக்கு:
076 640 3388

## அத்துகோரளவின் பதவி வெற்றிடம்

கொழும்பு, ஓக. 24
தலதா அத்துகோரள நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விலகியதைத் தொடர்ந்து, நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் வெற்றிடம் ஏற்பட்டுள்ளதாக நாடாளுமன்ற செயலாளரால் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இரத்தினபுரி தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தலதா அதுகோரல ஓகஸ்ட் 21ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்துள்ளதால் ஒன்பதாவது நாடாளுமன்றத்தில் உறுப்பினர் ஒருவருக்கான வெற்றிடம் ஏற்பட்டிருப்பதாக நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவருக்கு எழுத்துமூலம் அறிவித்துள்ளார். (ம)

## மரண அறிவித்தல்

### நாகரத்தினம் தனபாலசிங்கம்

**(ஓய்வு பெற்ற அதிபர், யா/வட்டு இந்துக்கல்லூரி)**



**தோற்றம்** **17.07.1957** — **மறைவு** **23.08.2024**

தெல்லிப்பளை பன்னாலையை பிறப்பிடமாகவும் கலட்டி அம்மன் வீதி யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நாகரத்தினம் தனபாலசிங்கம் அவர்கள் நேற்று (23.08.2024) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் நாளை (25.08.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**39/1, கலட்டி அம்மன் வீதி,**
**யாழ்ப்பாணம்**

தகவல்
**குடும்பத்தினர்.**
**077 406 3321, 077 404 9383**

(CS 1206) V-1

## வாகன இலக்கத்தகடு; பட்டியல் வெளியீடு

யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்து பிரதேச செயலகங்களிலும், மாவட்ட செயலகத்திலுள்ள மாவட்ட மோட்டார்வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்திலும் வாகன இலக்கத் தகடுகளின் பட்டியல் பொதுமக்களின் பார்வைக்காக அறிவிப்புபலகையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

வாகன இலக்கத் தகடுகளுக்கான பட்டியலை https://dmtap point ments.dmt.gov.lk என்ற இணையத்தளத்திலும் அல்லது 0212117116 என்ற தொலைபேசி இலக்கத்தை அழைப்பதன் மூலமும் திகதியையும் நேரத்தையும் முற்பதிவு செய்து, அதற்காக தங்கள் கைத்தொலைபேசிக்கு DMT ஆல் அனுப்பப்பட்ட குறுந்தகவ லுடன், புதிதாக வாகனங்களைப் பதிவு செய்த உரிமையாளர்கள் வாகனப் பதிவுப்புத்தகம், தேசிய அடையாள அட்டை என்பவற்றையும், மாகாணங்களுக்கிடையே வாகன உரிமை மாற்றம் பெற்றவர்கள் மேற்குறித்த இரு ஆவணங்களுடன் பழைய வாகன இலக்கத்தகடுகள் மற்றும் வாகன இலக்கம் பொறித்த ஒட்டும் தாள் என்பவற்றையும், யாழ்.மாவட்ட மோட்டார் வாகனப் போக்குவரத்து அலுவலகத்தில் குறிப்பிடப்பட்ட திகதியில் குறித்த நேரத்துக்கு சமர்ப்பித்து தங்கள் வாகனங்களுக்குரிய இலக்கத்தகடுகளைப் பெற்றுக் கொள்ளலாம். என யாழ். மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம் மாவட்ட காரியாலயம், மாவட்டச் செயலக உதவி ஆணையாளர் ஆர். சிவகரன் தெரிவித்துள்ளார். (ரி)

வேலை வாய்ப்பு

யாழ் நகரில் அமைந்துள்ள ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் மற்றும் சமுத்திரா ரேடர்ஸ் (Hard ware) நிறுவனங்களுக்கான வேலை வாய்ப்பு ஆண். பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புகளுக்கு:
077 077 6469, 077 494 9683

வேலை வாய்ப்பு

யாழ் நாவலர் வீதியில் அமைந்துள்ள சுப்பர் மார்க்கெட் ஒன்றிற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.

1. சிட்டை எழுதுநர் (Billing)
2. உதவியாளர் (Assistant)
3. பொதி செய்பவர் (Packing)
4. Rack பராமரிப்பாளர்

(வயது எல்லை 18-35 வரை)
(யாழ் மாநகர சபைக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது)

தொடர்பு: 077 419 5015

## மரண அறிவித்தல்



### பொன்னுத்துரை சிவபாலன்

காரைநகர் ஆயிலியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை சிவபாலன் (மொறட்டுவ பாலன்) அவர்கள் நேற்றுமுன்தினம் (22-08-2024) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மொறட்டுவ பிரபல வர்த்தகர் பொன்னுத்துரை - மீனாட்சி தம்பதியின் அன்பு மகனும் , காலஞ்சென்றவர்களான சிதம்பரபிள்ளை - பரிமளம் தம்பதியின் அன்பு மருமகனும், லோகேஸ்வரியின் அன்புக் கணவரும், காயத்திரி, அச்சுதன், அற்புதன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காண்டீபனின் அன்பு மாமனாரும், ஆதிரன் , சேயோன் ஆகியோரின் அன்புப் பேரனும் , கலாநிதி, சிவசோதி (சிவா), சிவராசன் (ராசன்), சிவகுமார் (கிளி), சிவானந்தன் (ஆனந்தன்), தயாநிதி ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற டொக்டர் தர்மலிங்கம், வள்ளிநாயகி, விக்கினேஸ்வரி (பேபி) புஸ்பராணி, விக்கினேஸ்வரி, திருக்குமார் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் காரைநகர் ஆயிலி இல்லத்தில் நாளை (25.08.2024) ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்கு நடைபெற்று முற்பகல் 10மணிக்கு பூதவுடல் சாம்பலோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும் இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
**குடும்பத்தினர்**

தொடர்புகளுக்கு:
காயத்திரி (மகள் - கனடா) - 0016 4797 24231 ,
அற்புதன் (மகன் - இலங்கை) - 0094 771 3 67731,
கிளி (சகோதரன் - பிரான்ஸ் ) - 0033 6243 36508,
ஆனந்தன் (சகோதரன் - பிரான்ஸ் ) 0094 7674 50730
அச்சுதன் (மகன் - கனடா) - 0014 3760 61644
சிவா (சகோதரன் - இலங்கை) - 0094 7406 34323
ராசன் (சகோதரன் - கனடா ) - 00141 6843 1901

(CS/56007) J-1

## கண்ணீர் அஞ்சலி



**அமரர் சாந்தலிங்கம் விபுலானந்தன்**

ஆலயத்தில் பணியாளராகக் கடமையாற்றிய அமரர் சாந்தலிங்கம் விபுலானந்தன் அவர்களின் மறைவு குறித்து எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா அம்பாளின் பாதக் கமலங்களில் சாந்தி பெறப் பிரார்த்திக்கின்றோம்.

துயருறும்
[illegible]
ஸ்ரீ [illegible]
நயினாதீவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊதிய...

இது முற்றுமுழுதாக சந்தர்ப்பவாதமாகும். நாமும் அரச உத்தியோகத்தர்களின் சம்பளத்தை 24 வீதத்தால் அதிகரிப்போம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

கேகாலையில் நேற்று இடம்பெற்ற தேர்தல் பரப்புரையின்போதே சஜித் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"அரச உத்தியோகத்தர்களை நாட்டுக்கு சுமையாகவே இதுவரை காலமும் உள்ள அரசாங்கங்கள் பார்த்து வந்தன. ஆனால் இப்போதுதான் இந்த அரசாங்கத்துக்கு அரச உத்தியோகத்தர்கள் முக்கியத்துவமானவர்களாகியுள்ளனர். இது சந்தர்ப்பவாதமாகும். தமது பதவிகளை தக்கவைத்துக் கொள்வதற்காக அரச உத்தியோகத்தர்களை ஏமாற்றுவதற்கு தற்போதைய அரசாங்கம் செயற்பட்டு வருகிறது.

சில மாதங்களுக்கு முன்னர் அரச சேவை பயனற்றது எனவும் அரச உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை குறைக்கப்படும் என்றும் அரச ஊழியர்கள் நாட்டின் சுமை என்றும் கூறினார்கள். ஆனால் இன்று அதே நபர்கள் போலியான வாக்குறுதிகளை வழங்கிக் கொண்டிருக்கின்றார்கள். நான் அவ்வாறு போலியான வாக்குறுதிகளை வழங்கமாட்டேன். கூறும் அனைத்தையும் நடைமுறையில் செய்து காட்டுவேன்.

எமது ஆட்சியில் வாழ்க்கைச் செலவுக்கு சமமாக அரச உத்தியோகத்தர்களின் சம்பளத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்கான பிரத்தியேகக் குழு ஒன்று நியமிக்கப்படும். 2025 ஆம் ஆண்டு ஜனவரி முதல் சகல அரச உத்தியோகத்தர்கள் அடிப்படைச் சம்பளமும் 24 வீதத்தால் அதிகரிக்கப்படும். தற்போது அரச உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும் ஆகக்குறைந்த 17 ஆயிரத்து 500 ரூபா வாழ்க்கை செலவு கொடுப்பனவானது 25 ஆயிரம் ரூபா வரை அதிகரிக்கப்படும்" - என்றார். (அ-ம)

## போலித்...

தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் மேலும் தெரிவித்ததாவது:-

"தேர்தல் காலத்தில் நிதிப் பரிமாற்றக் கலாசாரம் தீவிரமடைந்ததன் பின்னர் அரசியல்வாதிகளுக்கும் வாக்காளர்களுக்கும் இடையிலான சமூக ஒப்பந்தம் பலவீனமடைந்து, வியாபார நிலைமை தோற்றம் பெற்றுள்ளது. இதனால், அரசியல்வாதிகள் தேர்தல் பிரசாரத்துக்காகச் செலவுசெய்ய வேண்டிய நிதி தொடர்பில் ஒரு வரையறையை கொண்டுவரவேண்டும் என்பதற்காக 2010 ஆம் ஆண்டு தேர்தல் செலவினங்களை ஒழுங்குப்படுத்தல் சட்டம் தொடர்பான யோசனை முன்வைக்கப்பட்டு பெரும் போராட்டத்துக்கு மத்தியில் 2023 ஆம் ஆண்டு அது நிறைவேற்றப்பட்டது.

இதன்படி, தேர்தல் செலவினங்களைக் கண்காணிக்கும் சட்டத்துக்கு அமைய ஜனாதிபதித் தேர்தலில் வாக்காளர் ஒருவருக்கு வேட்பாளர் ஒருவர் பிரசாரச் செலவுக்காக 109 ரூபாவை செலவழிக்கவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுளது. ஆகவே அனைத்து வேட்பாளர்களும் இந்தத் தொகைக்கு உட்பட்ட வகையில் செயற்படவேண்டும்.

ஜனாதிபதித் தேர்தல் வாக்கெடுப்பு நிறைவடைந்து 21 நாள்களுக்குள் 38 வேட்பாளர்களும் தமது தேர்தல் பிரசாரச் செலவினங்கள் தொடர்பிலான உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களைத் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கவேண்டும். ஆவணங்களைச் சமர்ப்பிக்காத மற்றும் போலியான ஆவணங்களைச் சமர்ப்பிக்கும் வேட்பாளர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். மூன்று ஆண்டுகள் தேர்தலில் வாக்களிப்பதற்கும், வாக்குக்கோருவதற்கும் தடை விதிக்கப்படும். அத்துடன் குடியுரிமையை இழக்கவும் நேரிடும். ஆகவே சகல வேட்பா...ர்களும் அவர்களுக்கு ஆதரவு ...ங்கும் தரப்பினரும் தேர்தல் செல...ங்களை ஒழுங்குபடுத்தும் சட்டத்...கு அமைய செயற்பட வேண்டும்" என்றார். (அ-ம)

## தமிழர்களின்...

இவ்வாறு கடிதம் கிடைக்கப்பெற்றதை, பொதுக்கட்டமைப்பில் அங்கம் வகிக்கும் செல்வம் அடைக்கலநாதன் ஏற்றுக்கொண்டபோதிலும், ஏனையவர்கள் நேற்று இரவு வரையில் அப்படியானதொரு கடிதம் தமக்குக் கிடைக்கவில்லை என்றே தெரிவித்தனர்.

இது தொடர்பில் ரெலோவின் முக்கியஸ்தர் செல்வம் அடைக்கலநாதனைத் தொடர்பு கொண்டு கேட்டபோது அவர் தெரிவித்ததாவது:-

"தேர்தலில் சுயேச்சை வேட்பாளராகக் களமிறங்கியிருக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஏற்கனவே தமிழ்ப் பொதுக்கட்டமைப்பினரைப் பேச்சுவார்த்தைக்கு அழைத்திருந்தார். அதன் தொடர்ச்சியாகவே மீண்டும் பேச்சுகளுக்கு வருமாறு கடிதம் மூலம் அழைப்பு விடுத்துள்ளார். இந்தக் கடிதம் என்னிடம் தரப்பட்டது. பொதுக்கட்டமைப்பில் அங்கம் வகிக்கும் தரப்பினருக்கு வழங்குமாறு தெரிவிக்கப்பட்டது. அந்தக் கடிதத்தை தற்போது முறைப்படி அனைவருக்கும் அனுப்பியுள்ளேன்" - என்றார்.

ஜனாதிபதி ரணில் அனுப்பிவைத்துள்ள கடிதத்தில்,

"எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எனது வெற்றிக்கு தமிழ்ப் பொதுக்கட்டமைப்பினரின் ஆதரவைக்கோர விரும்புவதுடன், அவ்வாறு ஆதரவளிப்பதை முன்னிறுத்தி தமிழ்ச் சமூகத்தின் எதிர்பார்ப்புகள் என்னவென்பது பற்றிக் கலந்துரையாடுவதற்கு உங்களுக்கு (தமிழ்ப் பொதுக்கட்டமைப்பினருக்கு) அழைப்புவிடுக்கிறேன்.

எனது கூட்டணி தமிழ் சமூகத்துக்கு மாத்திரமன்றி, நான் எதிர்வருங்காலத்தில் கட்டியெழுப்புவதற்கு எதிர்பார்த்திருக்கின்ற சமத்துவம் பரஸ்பர நன்மதிப்பைப் பேணும் அபிவிருத்தியடைந்த நாட்டில் வாழும் அனைத்துப் பிரஜைகளுக்கும் பெரிதும் நன்மையளிப்பதாக அமையும்" என்றவாறாகக் குறிப்பிட்டுள்ளார். (அ-ம-125-26)

## தேர்தலைக்...

விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி, இந்தியா, நேபாளம், பங்களாதேஷ், பாகிஸ்தான், மாலைதீவு, சீனா உள்ளிட்ட நாடுகளின் பிரதிநிதிகள் ஸ்ரீலங்காவில் தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளனர்.

அத்தோடு பொதுநலவாய நாடுகளின் தேர்தல் கண்காணிப்பாளர்களும், ஆசிய தேர்தல் கண்காணிப்பு வலையமைப்பின் பிரதிநிதிகள் குழுவினரும் ஜனாதிபதித் தேர்தலின்போது கண்காணிப்புப் பணியில் ஈடுபடவுள்ளனர். (அ-ம)

## வெளிநாட்டு...

யாழ்ப்பாணம் மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவுப் பொறுப்பதிகாரி குணரோஜன் தலைமையிலான குழுவினரிடம் வழங்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார், மேற்படி சந்தேகநபரான பெண்ணைக் கைது செய்துள்ளனர்.

கொழும்பிலிருந்து வந்த அந்தப் பெண், மீண்டும் கொழும்புக்குச் செல்லத் தயாரானபோதே திருநெல்வேலிப் பகுதியில் வைத்துக் கைதுசெய்யப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-ம-26)

## வவுனியாவில்...

முன்னர் வவுனியா மருத்துவமனையில் பிறந்த ஆண் சிசுவொன்று உயிரிழந்திருந்தது. சிசுவின் இறப்புக்கு மருத்துவரின் அலட்சியமே காரணம் என்று சிசுவின் தந்தை வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு வழங்கியிருந்தார். இதையடுத்து நேற்றுமுன்தினம் சிசுவைப் பார்வையிட்ட நீதிவான் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு சிசுவின் சடலத்தைக் கொண்டுசென்று அங்குவைத்து உடற்கூற்றுப் பரிசோதனைகளை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டார்.

ஆனால், சிசுவின் சடலத்தை யாழ்ப்பாணத்துக்குக் கொண்டுசெல்வதற்கு அம்புலன்ஸ் வாகனம் மருத்துவமனையால் ஒழுங்கமைக்கப்படவில்லை. இது தொடர்பில் சிசுவின் தந்தையால் நீதிமன்றத்தில் நேற்று நகர்த்தல் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு விடயம் எடுத்துக்கூறப்பட்டது.

விசாரணைகளை மேற்கொண்ட நீதிவான், இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் அம்புலன்ஸ் வாகனத்தின் மூலம் சிசுவின் சடலத்தை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பிவைக்குமாறு உத்தரவிட்டார். இதையடுத்து பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் சிசுவின் சடலம் யாழ்ப்பாணத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. (அ-ம-110)

## ஜனாதிபதித்...

தவறானது எனவும் இந்த விடயத்தில் மக்களின் வாக்குரிமை மீறப்பட்டுள்ளது என்றும் உயர் நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பை வரவேற்றுள்ள மஹிந்த தேசப்பிரிய, இந்தத் தீர்ப்பு மக்களுக்குக் கிடைத்த வெற்றி என்றும் தெரிவித்துள்ளார்.

தேர்தலைத் தாமதப்படுத்தியது தவறான நடவடிக்கை. உயர்நீதிமன்றம் இதனை உறுதி செய்துள்ளமை நீதியை நோக்கிய முக்கியமான நடவடிக்கை. அதே நேரம் நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பால் நான் ஆச்சரியப்படவில்லை. ஏனெனில், நீதிமன்றம் பல தடவைகள் தேர்தல்களை ஒத்திவைப்பது மக்களின் உரிமைகளை மீறும் செயல் என்று தொடர்ச்சியாகத் தெரிவித்து வந்துள்ளது. உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு மதிப்பளித்து, ஜனாதிபதித் தேர்தல் முடிந்த பின்னர் உள்ளூராட்சித் தேர்தல் நடத்தப்படவேண்டும். தேர்தல்கள் ஆணைக்குழு விரைவில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்தும் என நம்புகின்றேன் என்றும் மஹிந்த தேசப்பிரிய மேலும் தெரிவித்தார். (அ-ம)

## பண...

டுள்ளார். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பெண்ணொருவர் வழங்கிய முறைப்பாட்டுக்கு அமைய விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் ஏறாவூரைச் சேர்ந்த ஆணொருவரைக் கைது செய்துள்ளனர். அவரிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-ம-26)

## கட்டடத்...

ஊர்காவற்றுறையைச் சேர்ந்த சின்னாண்டி பரமேஸ்வரன் (வயது-34) என்ற குடும்பத் தலைவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார். கட்டடமொன்றின் மேல்மாடியில் நேற்றுமுன்தினம் இரவு வெல்டிங் வேலை செய்து கொண்டிருந்தவரைக் காணவில்லை என்று தேடியபோதே அவர் நேற்றுக் காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் கிளிநொச்சிப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்ட நிலையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-ச-113)

## பொது...

குறித்த பிரசாரப் பயணம் பொலிகண்டி கிழக்கு, பொலிகண்டி மேற்கு, வல்வெட்டித்துறை, ஆதி கோவிலடி, தொண்டைமானாறு, வளலாய், பலாலி, தையிட்டி, காங்கேசன்துறை ஆகிய இடங்களின் ஊடாக நகர்ந்தது.

இதேவேளை - நேற்று ஆரம்பமான பிரசாரப் பயணம் தமிழர் தாயகத்தின் எட்டு மாவட்டங்களிலும் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படவுள்ளதுடன் ற்ற விவடக்கு-கிழக்கு தவிர்ந்த ஏனைய பகுதிகளிலும் மக்களின் அழைப்பின் பெயரில் பிரசாரப் பணிகள் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-66-26-100)

## விபத்துக்குள்ளானது...

வயோதிபர்கள் இருவர் காயமடைந்துள்ளனர்.

நேற்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. காரைச் செலுத்தியவர் மற்றும் உடன் பயணித்த அவரது நண்பர் ஆகிய இருவரே காயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். விபத்துத் தொடர்பில் யாழ்ப்பாணம் போக்குவரத்துப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ-ம-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமக்கான பரப்புரையை நாமே முன்னெடுப்போம்

## ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு அறைகூவல்

யாழ்ப்பாணம், ஒக. 24

தமிழ்ப் பொதுவேட்பாளர் என்பது நாமே என அனைவரும் உணர்வோம். எமது அபிலாஷைகளை ஒட்டுமொத்தமாகப் பிரதிபலிப்போம். நமக்காக நாமே பரப்புரை செய்வோம் என ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு அறைகூவல் விடுத்துள்ளது.

இது தொடர்பில் ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஒரேதேசமாக வெற்றிபெறும் ஜனாதிபதியுடன் எம் சுயநிர்ணய தீர்வுக்கான பேரம்பேசலை மேற்கொள்ள ஒட்டுமொத்தத் தமிழ்த்தேசியப் பலத்தைக்காட்டுவோம். சிதறிக்கிடக்கும் தமிழ்த்தேசியச் சக்திகளை ஒரேபுள்ளியில் குவிக்க கிடைத்த அரிய சந்தர்ப்பம் என உணர்வோம். அனைத்துச் சமூக ஊடகங்களிலும் நமக்கான பரப்புரையை நாமே முன்னெடுக்க முன்வரு வோம். பொறுப்புகளை யாரோ தலையில் கட்டிவிட்டு ஒதுங்கியிருந்து விமர்சிக்கும் மனநிலையிலிருந்து வெளிவருவோம்.

தமிழ்த்தேசியம் என்பது கட்சிகளுக்கு, அமைப்புகளுக்கு அப்பாற்பட்ட கண்ணீரும், செந்நீரும் கொடுத்து வளர்த்த எம் ஊன் கலந்து, உயிர் கலந்த உணர்வு என்பதை மனம் கொள்வோம். எந்தக் காரணம் கொண்டும் எம் கண்முன்னே தமிழ்த்தேசிய வீழ்ச்சிக்கு ஒருசில அதிமேதாவிகள் சொல்வதுபோல எம்மினம் எமக்கே ஆதரவளிக்காது என்ற போலிப் புச்சாண்டியைத் தகர்ப்போம் இந்தத் தேர்தலில் வீழ்த்தவேண்டிய அல்லது வெல்ல வைக்க வேண்டிய தென்னிலங்கை வேட்பாளருக்கான தேவைப்பாடு என்னும் கையறு நிலை இல்லாத சந்தர்ப்பத்தில் எம் தமிழ் மக்களுக்கு நமக்கு நாம் ஏன் வாக்களிக்கவேண்டும்? என்பதை இலகுவாக, உறுதியாக இந்த முப்பது நாள்களுக்குள் வடகிழக்கின் மூலை முடுக்கு எங்கும் உணரவைப்போம் - என்றுள்ளது. (ஒ-66)


## வீடு விற்பனைக்கு

கண்டி வீதியில் சென் ஜோன்ஸ் பாடசாலைக்கு அருகில் சகல வசதியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.
தரகர் தேவையில்லை

தொடர்பு: 077 369 8343

## காணி விற்பனைக்குண்டு

### யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையில் 240 நிலப்பரப்புக்காணி விற்பனைக்குண்டு



- 2 ½ பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- நன்னீர் ஊற்று - 20 அடி பாதை
- குடியிருப்புகள் சூழ உள்ள பகுதி
- நுச்சியம்பதி பிள்ளையார் கோவில் அருகாமையில்
- வட்டுக்கோட்டை Jaffna College 1Km தூரம்
- காரைநகர் - யாழ்ப்பாணம் பிரதான காபெற் வீதி. 500 M, தூரம். 784 வழி அரச, தனியார் பேருந்துகள் செல்லும் வழி
- 1 பரப்பின் விலை 150000 / = (ஒரு லட்சத்து ஐம்பதாயிரம்)

➡ பார்வையிடும் நேரம் - காலை 6.00 தொடக்கம் மாலை 6.00 மணிவரை.

குரு : 077 294 1521, 077 288 0152, 076 755 8006,

(cs.1189) (N-1)

## கட்டட ஒப்பந்தகாரர்களுக்கு

இந்தியா, தாய்லாந்து மற்றும் வியட்நாமிலிருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட கொங்கிறீற் மிக்சர் (Concrete Mixer) மற்றும் இத்தாலியில் இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட மின்னுயர்த்தியும் (Hoist) இப்பொழுது எம்மிடம்.

குறிப்பு: இந்தியா, தாய்லாந்து மற்றும் வியட்நாம் கொங்கிறீற் மிக்சர் (Original) வடபகுதியில் எம்மிடம் மட்டுமே. போலிகளைக் கண்டு ஏமாறாதீர்கள்.

"எம்மவரின் தெரிவு எமக்கே தெரியும்"





ஆர்க் .என். கம்பனி

- 150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4021
- A9 வீதி, எழுதுமட்டுவாழ். 070 191 3571
- A9 வீதி, பரந்தன் சந்தி, பரந்தன். 021 228 2020

Hotline: 071 535 7799 / 071 973 9917

(CS/55948) J-1

## வீடு வாடகைக்கு

நல்லூர் கோவிலில் இருந்து 300 M தூரத்தில் நவீன வசதிகளுடன் கூடிய வீடு குறுகியகாலத்திற்கு வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: 071 443 2989

## மணமகள் தேவை

1985ம் ஆண்டில் பிறந்த (V) கனடா குடியுரிமையை கொண்ட (Canadian Citizen) விவாகரத்து பெற்ற உதயச் செவ்வாய் மணமகனுக்கு.
மணமகள் தேவை.

075 538 9986, 077 360 5714

## பணியாளர் வெற்றிடம் - யாழ்ப்பாணம்

- தொழிற்சாலை முகாமையாளர் (ஆண் / பெண்)
- தொழில்நுட்ப உத்தியோகத்தர் - ஆண்
- களஞ்சியக்காப்பாளர் (Store Keeper)
- எழுதுநர் (ஆண் / பெண்)
- வெல்டர் (welders)
- காப்பென்டர் (Carpenter)
- மேசன்
- தொழிற்சாலை உதவியாளர்கள் (ஆண் / பெண்)

- அனுபவமுள்ளவர்களுக்கு உடனடி வேலைவாய்ப்பு
- சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்
- நேர் முகத்தேர்வு 26.08.2024 திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு அலுவலகத்திற்கு நேரில் வரவும்

தொடர்பு: 021 224 0110, 077 656 6873

EUT
புன்னாலைக்கட்டுவன் தெற்கு, யாழ்ப்பாணம்.

(cc.42967) (N-1)

## அடுத்த தென்னிந்திய தலயாத்திரை

30 பிரசித்தி பெற்ற ஆலயங்கள் புரட்டாசி 17 - September 17

கட்டணத்தில் உள்ளடங்குபவை

- Visa
- விமான பயணச்சீட்டு
- குளிரூட்டப்பட்ட வாகனம்
- குளிரூட்டப்பட்ட தங்குமிடம்
- மூன்று வேளை உயர்தர சைவ உணவு
- தண்ணீர் போத்தல், தேநீர், பழச்சாறு
- சிறப்பு நுழைவுக்கட்டணங்கள்
- 2 சுற்றுலா மேலாளர்கள்

Freedom Fly Travels

18 வருட அனுபவ Travel Partner

நல்லூர் திருவிழாவை முன்னிட்டு மாபெரும் விலைக்கழிவு.

தொடர்புகளுக்கு: 076 864 4011

Freedom Fly Travels
388 Temple road, Nallur, Jaffna

(CS 1199) A-1

## காணி விற்பனைக்கு

நல்லூர் நாவலர் வீதியில் Temple Road க்கு அருகில் 1. 1/4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. மற்றும் Colombo வெள்ளவத்தையில் 840, 1200, 1350 Sqft Apartments, தெஹிவளையில் 1260 Sqft 3BR . கல்கிசையில் 3p, 6p தனி வீடுகள் குறைந்த விலையில் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 115 3715

## செம்மறிக் கிடாய் ஆடுகள் விற்பனைக்கு

16-25kg நிறையுடைய வளர்ந்த செம்மறிக் கிடாய்கள் விற்பனைக்குண்டு.

இடம்:- யாழ்ப்பாணம். கெற்பேலி (கொடிகாமம் சந்தியிலிருந்து கச்சாய் சந்தியூடாக 6km)

அலுவலக நேரம் :- காலை 8.30am - மாலை 5.30pm

தொடர்பு: 076 200 1700

(CS/56003) N-1

## பிரசித்திமான ஆலயத்திற்கு வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாண நகருக்கு அண்மையில் (4 km) அமைந்துள்ள பிரசித்தம் பெற்ற ஆலயத்தில் கீழ்வரும் பதவிகளுக்கு வேலையாட்கள் தேவை

01. அலுவலக உதவியாளர்
02. ஆலய பல வேலை உதவியாளர்

நன்னடத்தையும் அனுபவமும் மிக்க பொருத்தமான ஆண்கள் விண்ணப்பிக்க முடியும்.

கவர்ச்சிகரமான வேதனம் வழங்கப்படும்

தொடர்புகளுக்கு: 077 222 2024, 077 446 3822

## பதவி வெற்றிடம்

எமது நிறுவனத்திற்கு கீழ்வரும் பணிநிலைகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. வரவேற்பாளர் (Receptionist)
2. கிராபிக் டிசைனர் (Graphic Designer)

* இரவு / பகல்



மேல் குறிப்பிட்ட பணிநிலைகளுக்கு தகுதியுடையோர் கீழ் தரப்பட்டுள்ள முகவரிக்கு எதிர்வரும் 26.08.2024 திங்கட்கிழமை காலை 9.00 முதல் பி.ப 2.00 மணி மற்றும் மாலை 6.30 முதல் இரவு 8.30 மணிவரை நேரில் சமுகம்தரவும்.

உதயன்
361. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 24.08.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.